வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 08.12.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 340 | பக்கங்கள் : 12

# ஜனாதிபதி ரணிலை சந்திக்கின்றனர் உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகள்!

## வடக்குக்கும் வருவார்கள்

கொழும்பு, டிசெம்பர் 08

**சுரேன் சுரேந்திரன் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகள் குழு இலங்கை வந்துள்ளது. இந்தக் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளது.**

அத்துடன், அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்கள், சிவில் சமூகத்திரையும் சந்திக்கவுள்ளது. இதனிடையே, தேசிய சமாதான பேரவையை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இந்தக் குழு சந்தித்து கலந்துரையாடவுள்ளது.

வடக்குக்கும் வரவுள்ள இந்தக் குழு அரசியல் மற்றும் சிவில் பிரதிநிதிகளை சந்தித்து நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, கடந்த 2021ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது உலக தமிழர் பேரவை உள்ளிட்ட புலம்பெயர்ந்தவர்களின் அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவானதையடுத்து கடந்த ஆண்டு இந்த அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டது.

தொடர்ந்து, புலம்பெயர் இலங்கையர்கள் நாட்டின் அபிவிருத்தி திட்டங்களில் பங்கேற்க வேண்டும் என்று ஜனாதிபதி

11

## பயங்கரவாத சட்டத்தின் பயன்பாட்டை தடை செய்க!

மனித உரிமைகள் கண்காணிப்பகம்

விரிவான செய்தி பக்கம் 6இல்

## பெப்ரவரி மாதத்துக்குள் மின் கட்டணம் குறையும்!

அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, டிசெ. 08

ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குள் மின்சாரக் கட்டணம் குறைவடையக்கூடும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த நாட்டில் என்ன நடந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். 13 மணிநேரம் மின்சாரம் துண்டிக்கும் நாடாக இருந்தது. எரிபொருட்களில் சிக்கல் ஏற்பட்டது.

ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குள் மின்சாரக் கட்டணம் குறையும் என நம்புகிறோம் என்று அவர் கூறினார். (ஐ)

## யாழ்ப்பாணத்தில் நெல் பயிரில் தத்திகளின் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 08

யாழ்ப்பாணத்தில் நெற் செய்கையில், தத்திகளின் தாக்கம் அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிறீரங்கன் அஞ்சனாதேவி தெரிவித்துள்ளார்.

மேலும், மழையுடனான காலநிலை காரணமாக, யாழ்ப்பாணத்தில் நெற் செய்கையில், கபில மற்றும் வெண் முதுகுத்தண்டு தத்திகளின் தாக்கம் அதிகரித்துள்ளது. இது, நெற்பயிர் செய்கையில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

11

## பெண்ணின் படத்தை 'பேஸ்புக்'கில் பதிவிட்டவருக்கு 2 வருட கடூழியம்!

அக்கரைப்பற்று, டிசெ. 08

பெண்ணின் நிர்வாண படத்தை பேஸ்புக்கில் கணக்கில் பதிவிட்டவருக்கு இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு இரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ)

## மகிந்த ராஜபக்ஷ

## அடுத்த வருடம் தேர்தல் நிச்சயம்!

கொழும்பு, டிசெ. 08

அடுத்த வருடம் நிச்சயம் தேர்தல் நடத்தப்படும். அது ஜனாதிபதி தேர்தலா அல்லது பொதுத் தேர்தலா என்று கூற முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு - மத்தேகொடை பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை சமய நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில்,

11

## செவித்திறன் குறையுள்ளோருக்கு 2024இல் சாரதி அனுமதி பத்திரம்!

4 இலட்சம் பேருக்கு வழங்கப்படும்

கொழும்பு, டிசெ. 08

முழுமையாக செவித்திறன் குறைபாடுள்ள 4 இலட்சம் பேர் அடுத்த வருடம் (2024) சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்று மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் கம்பஹா மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற மாற்றுத்திறனாளிகளால் விபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் இது மிகவும் வெற்றிகரமான திட்டமாக நடைமுறைப் படுத் தப்பட்டதாகவும் ஆணையாளர்

11

## கழுத்து நெரிக்கப்பட்டதிலேயே சம்மாந்துறை சிறுவன் மரணம்!

சம்மாந்துறை, டிசெ. 07

சம்மாந்துறை மதரஸாவில் (இஸ்லாமிய மத பாடசாலை) தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட சிறுவன் கழுத்து நெரிக்கப்பட்டே கொல்லப்பட்டார் என்று அம்பாறை பொது மருத்துவமனை மரண விசாரணை அதிகாரி சி. ரி. மகாநாம அறிக்கையிட்டுள்ளார்.

அம்பாறை பொது மருத்துவமனையில் நேற்று நடந்த மரண விசாரணையின் பின்னரே அவர் இவ்வாறு அறிக்கையிட்டார்.

மரணமடைந்த மாணவனின் சடலமானது சம்மாந்துறை பகுதியில் மார்க்க கடமைகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் பாதுகாப்பாக

11

## இரு வாரங்களுக்குள் கடன் கிடைக்கும்!

அலி சப்ரி நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 08

ஐ. எம். எவ். நிர்வாகக் குழுவானது இலங்கை அதிகாரிகளுக்கும் அவர்களின் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை எதிர்வரும் 12 ஆம் திகதிக்குள் கடன் வழங்குவதற்கான அதிகார பூர்வ கடன் குழு மூலம் (OCC)

11

## முல்லைத்தீவில் 130 பேருக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களம் வழக்கு!

முல்லைத்தீவு, டிசெ. 08

முல்லைத்தீவில் கரியல் வயல், சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்துள்ள 130 பொதுமக்க ளுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களம் வழக்கு தொடுத்துள்ளது.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கு தொடர்பாக மக்கள் சார்பில் மன்றில் வாதிட்ட சட்டத்தரணி சி. தனஞ்சயன் கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுண்டிக்குளம் பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு எதிராக வன ஜீவராசிகள் திணைக் களம் 130 நபர்களுக்கு எதிராக வழக்குகளை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். அவர்கள் அத்துமீறி குடியிருந்தனர், தாவரங்களை அழித்தனர் என்ற குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர்.

சுண்டிக்குளம் பிரதேசத்தில் இருந்து 6 கிலோ மீற்றர் தூர தொலைவில் இருக்கும் மக்களுக்கு எதிராக - இதில் இறந்தவர்களும் அடக்கம். அத்துடன், ஒருவருக்கு எதிராக மூன்று வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சரியான வரைபடங்களோ, எந்த காலப்பகுதியில் அப்பகுதி சரணாலயமாக இருந்தது என்பதற்கான எந்தவித தகவல்களோ இல்லாத

11

## தன்னை புலி என்று கூறுவதற்கு சாணக்கியனுக்கு தகுதியில்லை!

சிங்கள பெண்ணை திருமணம் செய்யவுள்ளார் என்றும் கூறினார் இராஜாங்க அமைச்சர் சம்பத்!

கொழும்பு, டிசெ. 08

விடுதலைப் புலிகள் அமைப்பு பற்றி பேசுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 9 எம். பிக்களுக்கு மாத்திரமே உரிமையுண்டு. சாணக்கி யனுக்கு உரிமையில்லை. ஏனெனில், அவரின் செயல்பாடுகளும் உறவுகளும் சிங்கள வர்களுடன் தொடர்புபட்டுள்ளது. இவர் சிங்கள பெண்ணை மணக்கவுள்ளார்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான அமைச்சுகள் மீதான விவா தத்தில் உரையாற்றிய சாணக்கியன் எம். பி., "என்னை புலி என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்கிறேன்", என்று

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து அவ்வப்போது சில மேற்குலக நாடுகளின் நிதிப் பங்களிப்பில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் நடத்தும் கருத்துக் கணிப்புகள் தொடர்பாக முன்னரும் இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றேன்.

அவை தமக்கு விருப்பமில்லாத ஒருவரை வெற்றி பெறப் போவதாகக் காட்டுவது மற்றையவர்கள் எல்லோரையு ம் ஓர் அணியாக அணி திரட்டுவதற்காகவா என்ற கேள்வியையும் அப்போது எழுப்பியிருந்தேன்.

அடுத்த ஆண்டு வாக்களிக்கும் உரிமையை பெறுகின்றவர்களிலிருந்து முப்பதுகளை எட்டியவர்கள் வரையான இளைஞர்கள் பெரும்பான்மையானவர்கள் ஓர் அரசியல் மாற்றத்தை விரும்புகின்றார்கள் என்பது புரிந்துகொள்ளக்கூடியதே. ஆனாலும், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் தேர்தலில் வாக்களிக்க செல்லும்போது யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதை பெற்றோரிடம் கேட்டே முடிவு செய்வார்கள் என்கிறார் தெற்கின் நிலைமைகளைப் புரிந்துகொண்ட நண்பர் ஒருவர். வடக்கில் தேர்தல் பரப்புரையின்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பை கடுமையாக விமர்சிப்பவர்களும் தேர்தலில் வாக்குச்சீட்டு கையில் கிடைத்ததும் அவர்களுக்கே வாக்களிப்பது போலத்தான் தெற்கிலும் என்றே எண்ணத் தோன்றியது.

இப்போது தெற்கில் பேசப்படும் விடயம், பொதுஜன பெரமுன கட்சியின் 'மூளை' என்று வர்ணிக்கப்படும் பஸில் ராஜபக்ஷ தனது அணி ஒன்றை களம் இறக்கி முன்னெடுத்த கருத்துக்கணிப்பு ஒன்று, அவர்கள் அடுத்து நடக்கும் பாராளுமன்றத் தேர்தலில் இருபத்து இரண்டு முதல் இருபத்தி ஐந்து வரையான ஆசனங்களை பெறுவார்கள் என்று தெரிவித்திருக்கின்றதாம்.

இத்தனை 'அனர்த்தம்' நடந்து முடிந்த பின்னரும், அவர்கள் அண்ணளவாக இருபத்தி ஐந்து இலட்சம் வாக்குகளை பெறுவார்கள் என்பது அவர்களுக்கு உற்சாகமளித்திருப்பதாகவும் இதனால் அடுத்து யாரை முன்னிறுத்தி அரசியலை நடத்துவது என்பதில் முடிவெடுக்க முடியாமல் இருப்பதாகவும் அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

மகிந்தர் வயது முதிர்ச்சி காரணமாக முன்னரைப்போல ஓடித்திரியக் கூடிய நிலையில் இல்லை. பஸிலை முன்னிலைப் படுத்த குடும்பத்தில் யாருக்கும் விருப்பமில்லை. இதனால், ஜே.வி. பியை ரில்வின் சில்வா திரை மறைவில் இருந்து இயக்குவது போல பொதுஜன பெரமுனவை வழிநடத்தும் பொறுப்பை கோட்டாவிடமே கையளிக்க ராஜபக்ஷ குடும்பம் விரும்புவதாகத் தெரிகின்றது. அவர் தவறாக வழிநடத்தப்பட்டுவிட்டாரே தவிர, அவர் தவறான ஆள் அல்ல என்ற கருத்தை ஏற்கனவே அவரின் ஆதரவுத் தளத்தில் ஏற்படுத்தும் முயற்சிகள் தொடங்கியிருந்தன.

இந்நிலையில், பெரமுன தமது கட்சியின் வருடாந்த மாநாட்டையடுத்து புதிய உத்வேகத்துடன் அரசியலை தொடங்கவிருக்கின்றது.

இதேவேளை, கோட்டா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது அவரது செல்வாக்கு தொடர்பாக அவுஸ்திரேலியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட அவரின் விசுவாசி ஒருவர் வடக்கு - கிழக்கு தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் ஒரு கருத் துக்கணிப்பை நடத்தினார்.

மிகவும் தொழில்நுட்பங்களுடன் கூடிய செயலி ஒன்று தயாரிக்கப்பட்டு, அதில் நீங்கள் சஜித்துக்கு வாக்களிப்பீர்களா கோட்டாவுக்கு வாக்களிப்பீர்களா என்ற கேள்வியை மாத்திரம் கேட்டு, பல நூற்றுக்கணக்கானவர்கள் தொகுதிவாரியாக கணக்கெடுப்பை நடத்தினர்.

கணக்கெடுப்பு முடிந்த பின்னர், இலங்கையின் வரைபடத்தில் கோட்டாவுக்கு வாக்களிப்போம் என்று சொன்னவர்களை சிவப்பு நிறத்திலும் சஜித்துக்கு வாக்களிப்போம் என்று சென்னவர்களை பச்சை நிறத்திலும் பதிவு செய்ய வைத்து வரைபடத்தை பார்த்தபோது எங்கெல்லாம் பச்சை நிறம் அதிகமாக தெரிகின்றதோ அங்கெல்லாம் விசேட படையணிகள் களம் இறக்கப்பட்டு கோட்டா ஆதரவு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதாம்.

அதே குழுவை இறக்கி இப்போது கோட்டா தரப்பும் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தி விட்டு ரணில் தலைமையில் கட்சிகளை ஒன்றிணைக்கும் வேலையை தொடங்கியிருக்கின்றதாம்.

முதலில் அந்த கருத்துக் கணிப்பு முடிவு விபரங்கள் மகிந்த குடும்பத்தினருக்கு காட்டப்பட்டு விளக்கமளிக்கப்பட்டி ருக்கிறது. அதே போல சஜித் தரப்புக்கும் அதனைக் காட்டி அவர்களையும் ரணில் தலைமையிலான அணியில் சேர்க்கும் முயற்சியை சிலர் தொடங்கியிருக்கின்றனர் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

அடுத்த தேர்தலில் ரணிலை அவர் ஆதரிப்பது எனில், தனக்கு பிரதமர் பதவி வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் இருக்கும் சஜித்தும், தன்னை ஒரு சிறந்த 'பாராளுமன்றவாதி'யாக காட்டுவதிலேயே அண்மைக்காலங்களில் அதிக கவனம் செலுத்தி வருவதையும் சுட்டிக்காட்டுகின்றார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.

ரணிலை சுற்றி மற்றவர்கள் இப்படி காய் நகர்த்திக்கொண்டிருக்க ரணில் நாட்டை எப்படி வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பது என்று மட்டும் யோசித்துக் கொண்டிருக்கிறார்.!

- ஊர்க்குருவி.

# மக்களின் காணிகள் மக்களுக்கே இல்லையேல் போராட்டம் நடக்கும்!

### ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 08

மக்களுடைய காணிகளை மக்களுக்கே வழங்காவிட்டால் மாவட்ட செயலகம் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் முன்பாக பெரும் போராட்டத்தை நடத்துவோம் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்துள்ளார்.

கரியல்வயல், சுண்டிக்குத்தை அண்மித்த பகுதியில் வாழும் மக்கள் 130 நபர்களுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களம் வழக்கு தாக்கல் செய்திருந்தது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வன ஜீவராசிகள், வன இலாகா தொல்லியல், இல்மனைட், படையினர் இவ்வாறு நிலப்பரப்புகளை அபகரிக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் முல்லைத்தீவில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 75 வீதமான காணிகள் வன இலாகாவிடமும் நந்திக்கடல், நாயாறு, சுண்டிக்குளம் உள்ளிட்ட பகுதிகள் முழுவதும் கிட்டத்தட்ட 12 வீதமான காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அபகரித்து எங்களை குறுகிய இடத்துக்குள் மட்டும் இருக்குமளவுக்கு செய்தால் நாங்கள் என்ன செய்வது.

உழைப்புக்கும், வாழ்வாதாரத்துக்கும் எங்கே போவது?, பிள்ளைகளை எவ்வாறு வளர்ப்பது இவ்வாறு மோசமான திட்டத்தை திணைக்களங்கள் ஊடாக தமிழர்களுடைய நிலங்களை பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு இனவாதிகள் செய்து கொண்டிருக்கின்றனர்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் இருந்த காணிகள் 2 இலட்சத்து 22 ஆயிரத்து 6 ஏக்கர். ஆனால், 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் முழுவதையும் எடுத்து 4 இலட்சத்து 35 ஆயிரம் ஏக்கர் காணியை வன இலாகா வைத்திருக்கின்றது என்றால் எங்களுடைய காணிகளை காத்தது யார்.? விடுதலைப் புலிகள்தான் எங்களுடைய காணிகளை காத்து மக்களுக்காக நின்றவர்கள் என்பது இதனூடாக தெரியும்.

அப்போது இளைஞர்கள், யுவதிகள் நிலங்களை பாதுகாத்து வாழ்வாதாரத்துக்கு வழிசமைத்தார்களே தவிர, அவர்கள் பயங்கரவாத செயல்பாடுகளில் ஈடுபடவில்லை. ஆகவே பயங்கரவாத செயல்பாடுகளில் ஈடுபடும் திணைக்களங்களாக இந்த திணைக்களங்களே காணப்படுகின்றன.

எங்களுடைய காணிகளை எங்களுக்கே வழங்க வேண்டும். வழங்காது விட்டால் மாவட்ட செயலகம், வன ஜீவராசிகள் திணைக்களத்தின் முன்பாக மக்கள் ஒன்று திரண்டு பெரும் போராட்டத்தை முன்னெடுப்போம் - என்றார். (ஐ)

# மீண்டுமொரு கோட்டாபயவை நாட்டு மக்கள் ஏற்கமாட்டார்கள்

### அஜித் மன்னப்பெரும எம். பி.



கொழும்பு, டிசெ. 08

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், 5 வருடங்கள் அமைச்சராக பதவி வகிக்காத ஒருவரால் நாட்டை ஆள முடியாது என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். இதன்படி எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் மற்றுமொரு கோட்டாபய பிறப்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டு மக்கள் படும் துன்பங்களை ஊடாக அதிகாரத்தைப் பெறுவது எதிர்க்கட்சித் தலைவரின் கொள்கையோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையோ அல்ல, நாட்டை உருவாக்கி அதிகாரத்தைப் பெறுவதே கொள்கை. ஐக்கிய மக்கள் சக்தி ஒரு மக்கள் இயக்கம் என்றும் அது பணம் சம்பாதிக்கும் இயக்கம் அல்ல என்றும் சஜித் பிரேமதாஸவால் நாட்டை மீட்டெடுக்க முடியும் என்பது நடவடிக்கை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அஜித் மன்னப்பெரும எம். பி. தெரிவித்தார். (ஐ)

# கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களின் பணிப்புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது

கொழும்பு, டிசெ. 08

அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் மேலதிக நேரசேவையிலிருந்து விலகி ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கை நேற்றும் தொடர்ந்தது.

மேலதிக நேர கொடுப்பனவு குறைக்கப்பட்டதை கண்டித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அபேக்ஷா மருத்துவமனையில் கதிரியக்க பிரிவு சேவைகள் இடம்பெறவில்லை.

மேலதிக நேர கொடுப்பனவை சுகாதார அமைச்சு குறைத்துள்ளதாகவும் இதனை கண்டிக்கும் வகையிலேயே தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களின் சங்கத்தின் பிரதம செயலாளர் தர்மகீர்த்தி ஏப்பா கூறினார்.

# சிறப்பு சொற்பொழிவும் நாயன்மார் குருபூசையும்

யாழ்ப்பாணம், டிசெ. 08

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக சிவசிறீ. பால. திருகுணானந்த குருக்கள் நடத்தும் வாராந்த பெரிய புராண சிறப்பு சொற்பொழிவும் மாதாந்த நாயன்மார் குருபூசையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார்.

சேக்கிழார் பெருமான், கண்ணப்ப நாயனார் குருபூசையை தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறும். இதையடுத்து, "தொண்டு செய்து நாலாரில் கண்ணிடத்து அப்ப வல்லேன் அல்லேன்" என்ற தலைப்பில் சைவப்புலவர் செ. த. குமரன் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவு நிறைவில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். இதையுடுத்து ஆன்மிகவிருந்தினர் உரையும் குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
08.12.2023 வெள்ளிக்கிழமை
ஃஉனாடு
சோபகிருது வருடம், கார்த்திகை 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# சஜித் பிரேமதாஸவின் கவனத்துக்கு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தமிழ் மக்களின் பிரச்னைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டுமென்று தெரிவிததிருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் அவர் விடயங்களை முன்னெடுக்க வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார். விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் என்பது ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை காணும் தமிழர் முயற்சிதான். பிரிவினைவாத அரசியலை தமிழ் மக்கள் முற்றிலும் கைவிட்டுவிட்டனர். ஓர் அரசியல் போக்கு என்பது அந்த அரசியல் போக்குக்கு எவர் தலைமை தாங்குகின்றார் என்பதைப் பொறுத்தே அமையும். அந்த வகையில் விடுதலைப் புலிகளின் காலத்துக்குப் பின்னர் பிரிவினைவாத அரசியலை முன்வைக்கக்கூடிய தலைமை தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.

தமிழ்த் தேசியவாத அரசியலின் முகம் அடிப்படையிலேயே மாறிவிட்டது. ஆனால், தமிழ் அரசியல் மாற்றத்தை உள்வாங்கி தமிழ் மக்களையும் இந்த நாட்டின் கட்டமைப்பின் சமநிலையான மக்கள் கூட்டமாக ஏற்றுக்கொள்ளக் கூடியவாறான தீர்வு ஒன்றை காண்பதில் ஆட்சியாளர்கள் அக்கறை காண்பிக்கவில்லை. இதுதான் இங்குள்ள அடிப்படையான பிரச்னையாகும். இதனைப் புரிந்து கொண்டால் மட்டும்தான் ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை காணமுடியும்.

இதில், தென்னிலங்கையின் அனைத்து அரசியல் தரப்புகளுக்கும் முக்கியமான பங்கு உண்டு. ஏனெனில், இன்றைய நிலைக்கு அனைத்து தரப்புகளுமே காரணமாகும். ஓர் எதிர்க்கட்சித் தலைவர் என்னும் வகையில் சஜித் பிரேமதாஸவுக்கு இதில் பிரதான பங்கு உண்டு. மற்றவர்களை விமர்சித்துவிட்டு அமைதியாக செல்வதன் மூலம் சஜித்தின் பணி முடிந்துவிடாது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை பலவீனப்படுத்தி 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அதிகாரங்களைப் பறித்தது சஜித் பிரேமதாஸவின் தகப்பனார் ரணசிங்க பிரேமதாஸ என்பதை அவர் மறந்துவிடக்கூடாது. விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இதில் சமதையான பங்கு உண்டு. ஆனால், ரணசிங்க பிரேமதாஸவின் செயல்பாடுகளையும் விடுதலைப் புலிகளின் அணுகுமுறையையும் சமநிலையில் அணுக முடியாது.

இந்திய படைகளின் தாக்குதலில் இருந்து தப்பும் நோக்கிலேயே விடுதலைப் புலிகளின் தலைமை அன்றைய அரசியலை அணுகியது. ஆனால், ஓர் அரச தலைவரான ரணசிங்க பிரேமதாஸ தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக்கூட பறித்தெடுப்பதில் வெறித்தனமான அணுகுமுறையை கொண்டிருந்தமை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அன்று பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதற்காக குரல் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு ஏனையவர்களை விடவும் சஜித் பிரேமதாஸவுக்கு உண்டு. கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர். அதே தமிழ் மக்கள் 2005இல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்நிலையிலேயே தங்களின் வாக்குகளை கையாண்டனர்.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை காண்பதில் தமிழர் தரப்புகள் அனைவருமே தயாராகவே இருக்கின்றனர். விதிவிலக்கான சில உதிரி புலம்பெயர் குழுக்கள் மட்டுமே தமிழீழம் தொடர்பில் பேசிவருகின்றன. அவ்வாறானவர்களை தமிழ் மக்கள் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், இந்த விடயத்தில் தென்னிலங்கையிலிருந்து சாதகமான பதில்கள் இதுவரையில் வரவில்லை. அதுதான் இந்த விடயத்திலுள்ள பிரச்னை.

தொடர்ந்தும் இனவாத – அதிகாரப் பகிர்வுக்கு எதிரான கருத்துகளை முன்வைக்கும் அரசியல் குழுக்களுக்கும் – சாதகமான அணுகுமுறையையே ஆட்சியாளர்கள் கைக்கொள்ளுகின்றனர். இந்தப் போக்கை மாற்றுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்னும் வகையில் சஜித் தலைமையேற்க வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் பொறுப்பை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறில்லாது பாராளுமன்றத்தில் மட்டும் பேசுவதால் பயனில்லை.

# இறுதிப் போரில் மாயமான மோ. சைக்கிள் உரிமையாளருக்கு நீதிமன்று அழைப்பாணை!

*கொழும்பு, டிசெ. 08*

இறுதி போரின்போது முள்ளிவாய்க்காலில் மோட்டார் சைக்கிளை இழந்த கிளிநொச்சியை சேர்ந்த உரிமையாளர் ஒருவருக்கு காலி நீதிமன்றத்தால் புதன்கிழமை அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இறுதிப் போர் காலத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் முள்ளிவாய்க் ஸ்ரீகாலில் விடப்பட்ட நிலையில் அது படையினரின் பிடியில் இருந்து காணாமல் போயிருந்தது என்று கூறப்படுகின்றது.

போர் காலத்தில் காணாமல்போன மோட்டார் சைக்கிளை உரிமையாளர் நீண்ட காலம் தேடியும் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், 14 ஆண்டுகளின் பின்பு கடத்தல் சம்பவம் ஒன்றுடன் இந்த மோட்டார் சைக்கிள் தொடர்புபட்டு மீட்கப்பட்டுள்ளதால் உரிமையாளரை இன்று வெள்ளிக்கிழமை முன்னிலையாகுமாறு காலி நீதிமன்றம், மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

# இலங்கை - மாலைதீவு இடையே சட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தம்!

## அமைச்சரவை அனுமதியளிப்பு

*கொழும்பு, டிசெ. 08*

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் மாலைதீவு குடியரசுக்கும் இடையிலான குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட ஒத்துழைப்புக்களை வழங்குதல் தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கு ஏற்கனவே கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

எனினும், மாலைதீவு தரப்பினர் ஒப்பந்த வரைவுக்கு பின்னர் ஒரு சில மேலதிக திருத்தங்களை முன்மொழிந்து, குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடாமல் இருந்தனர்.

பின்னர் இருதரப்பின் உடன்பாடுகளுக்கமைய திருத்தப்பட்ட புதிய ஒப்பந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைத்துள்ளது.

இதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும், பின்னர் ஒப்பந்தத்தை இருநாடுகளின் இராஜதந்திர தூதுக் குழுவால் ஏற்று அங்கீகரிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# உடுப்புக்குளம் மாணவர்களுக்கு மழைக் கவசங்கள் அன்பளிப்பு!



*முல்லைத்தீவு, டிசெ. 08*

முல்லைத்தீவு உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு விஜயலாயன் அறக்கட்டளையால் மழைக் கவசங்கள் வழங்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் பி. குணபாலன் தலைமையின் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைதுறைப்பற்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்ஆர். ஜெகதீசன், அறக்கட்டளையின் இணைப்பாளர் நா. பார்த்தீபன், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

கனடிய இராணுவ உயர் அதிகாரியாகவும் ஒட்டாவா நகரின் காவல்துறை அதிகாரியாகவும் கடமையாற்றிய விஜயாலயன் மதியழகன் ஞாபகார்தமாக விஜயாலயன் அறக்கட்டளை நிறுவப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புராண, இதிகாச கதை கற்றல் வகுப்புகள்!

*யாழ்ப்பாணம், டிசெ. 08*

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயம் நடத்தும் நாடகத்திறன் மூலமான புராண, இதிகாச கதைகள் கற்றல் வகுப்பு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆரம்பமாகவுள்ளது.

இதில், ஆசியுரையை தேவஸ்தானப் பிரதம குருக்கள் இராஜேந்திர சுவாமிநாத குருக்கள் வழங்குவார். தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார். நாடக ஆசிரியாக இணுவையூர் ஞானஏந்தல் மா. ந. பரமேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். பயிற்சி வகுப்புகள் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 08 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - கார்த்திகை 22
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : ஏகாதசி




**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**கடகம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். வெற்றி பெறும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் வளைந்து கொடுத்து போவது நல்லது. இடம் பொருள்ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். புகழ் கௌரவம் கூடும்நாள்.

**தனுசு**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார். சாதிக்கும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் செயல் படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிக்ஜம் புயல் பாதிப்பு:**

# ரூ. 450 கோடி மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு!

புதுடில்லி, டிசெ. 08

**மிக்ஜம் புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்துக்கு 450 கோடி (இந்திய) ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது. ஆந்திராவுக்கு 493 கோடி ரூபாய் விடுவித்தது.**

இது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் அவர்,

“மிக்ஜம் புயல் தமிழகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தை மிகக் கடுமையாக பாதித்துள்ளது. இந்த இரு மாநிலங்களிலும் சேதத்தின் அளவு வேறுபட்டாலும், மாநிலங்களின் பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பயிர்கள் மூழ்கியுள்ளன. புயலின் பாதிப்புகளை நிர்வகிப்பதற்கு மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மத்திய அரசின் இரண்டாவது தவணை பங்களிப்பை முன்கூட்டியே விடுவிக்கும்படி உள்துறை அமைச்சகத்துக்கு பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார். அதன்படி, இரண்டாவது தவணைத் தொகையாக ஆந்திராவுக்கு ரூ.493 கோடியும், தமிழகத்துக்கு ரூ.450 கோடியும் விடுவிக்கப்படுகிறது - என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக தமிழகத்தில் ‘மிக்ஜம்’ புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை சீர் செய்திட இடைக்கால நிவாரணமாக ரூ. 5,060 கோடி வழங்கிடக் கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் புதன்கிழமை கடிதம் எழுதியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழகத்துக்கு தேவையான உதவிகளை நாம் செய்வோம்

## பாதுகாப்பு அமைச்சர் உறுதி



சென்னை, டிசெ. 08

தமிழக மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப மத்திய அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என்று அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

சென்னையில் புயல் பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று சென்னை வந்தார்.

தொடர்ந்து அமைச்சர் ராஜ்நாத் சிங், மிக்ஜம் புயல் பாதிப்புகளை இராணுவ ஹெலிகொப்டரில் சென்று ஆய்வு செய்தார். அவருடன் மத்திய இணையமைச்சர் எல். முருகனும் சென்றார்.

புயல் பாதிப்புகளை ஆய்வு செய்த பின்னர் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு. க. ஸ்டாலினை சந்தித்துப் பேசினார். தமிழகத்தில் புயல் பாதிப்பு, எடுக்கப்படும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து ராஜ்நாத் சிங்கிடம் முதல்வர் ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

இதன்பின்னர், இருவரும் கூட்டாக செய்தியாளர் சந்திப்பை நடத்தினர்.

அதில், ‘புயலால் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டது அறிந்து பிரதமர் மோடி கவலையுற்றார். தமிழக மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் அனைத்தையும் மத்திய அரசு செய்யும்.

பிரதமரிடம் நான் தனிப்பட்ட முறையில் இதுகுறித்து பேசி கண்காணிக்குமாறு கூறியிருக்கிறேன். இராணுவம், கடற்படை, தேசிய மீட்புப்படை என அனைத்துத் துறையினரும் தீவிரமாக மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப மத்திய அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என பிரதமரின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

இதேநேரம் முதல்வர் கருத்துரைக்கையில்,

இந்த பெருவெள்ளத்தில் இருந்து மீண்டு சென்னை மக்கள் இயல்பு நிலைக்கு வரத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த பெரும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், அரசு அலுவலர்கள், தன்னார்வலர்கள் அனைவரும் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் இந்த பெருமழையிலும் உயிரிழப்புகளும், பொருட்சேதமும் குறைக்கப்பட்டுள்ளது.

சாலைகள், பாலங்கள், கட்டடங்கள் போன்ற பொது கட்டமைப்புகளை சீர்செய்வதற்கும் நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் ரூ. 5,060 கோடி வழங்கிடுமாறு பிரதமரிடம் கோரிக்கை வைத்தேன். அதன்படி இடைக்கால நிவாரண நிதியாக ரூ. 450 கோடி வழங்கியதற்கு பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

# தமிழ்நாட்டுக்கு தேவையான உதவிகளை மத்தியிடம் ராஜ்நாத் சிங் எடுத்துரைப்பார்

## தமிழக பா. ஜ. க. தலைவர்

சென்னை, டிசெ. 08

மிக்ஜம் புயலால் பேரழிவை சந்தித்த தமிழ்நாட்டுக்கு தேவையான உதவிகள் தொடர்பில் ராஜ்நாத் சிங் மத்திய அரசுக்கு எடுத்துரைப்பார் என்று பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை கூறினார்.

மிக்ஜம் புயல் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூரில் ஏற்பட்டுள்ள மழை வெள்ள பாதிப்புகளை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஹெலிகொப்டர் மூலம் பார்வையிட்டார் என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர்,

“மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சற்று நேரத்துக்கு முன்பு, சென்னை விமான நிலையத்தில் தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோருடன், ஹெலிகொப்டர் மூலமாக சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு மிக்ஜம் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை பார்வையிட்டார்.

பா. ஜ. க. சார்பில் அனைத்து தலைவர்களும் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்கை சந்தித்து, தமிழக மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருந்து வருவதற்கு நன்றி தெரிவித்திருக்கிறோம். அதேபோல் வரும் காலத்தில், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் மூலம், தமிழக மக்களுக்கு தேவையான உதவிகளை மத்திய அரசு விரைந்து செய்ய வேண்டும் என கோரிக்கையும் வைத்துள்ளோம். தமிழ்நாட்டுக்கு தேவையான உதவிகள் தொடர்பில் ராஜ்நாத் சிங் மத்திய அரசுக்கு எடுத்துரைப்பார் என்றும் அவர் கூறினார். (ஐ)

# நாம் உயிருடன் இருக்கும்வரை தனி ஈழத்துக்கு இடம் இல்லை!

## சரத் வீரசேகர திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 08

**வடக்கில் சிறுவர்களின் மனங்களில் சிங்களவர் தொடர்பில் வைராக்கியம் விதைக்கப்படுகிறது. தனி ஈழ இராச்சியத்துக்கு நாங்கள் உயிருடன் இருக்கும் வரை இடமளிக்க போவதில்லை. சிங்களவர்களும் இடமளிக்க மாட்டார்கள். நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று தோற்றம் பெற்றால் தமிழ் அரசியல்வாதிகளும், அவர்களின் குடும்பத்தினரும் வெளிநாடுகளுக்கு செல்ல இடமளிக்கமாட்டோம். அவர்களும் யுத்தக் களத்துக்கு செல்ல வேண்டும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு, புத்தசாசனம்,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்த சாசனத்தை பாதுகாக்க வேண்டுமாயின் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த தொல்பொருள் சின்னங்கள் மற்றும் மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன.வெடுக்குநாறிப் பகுதியில் பௌத்த சின்னங்களை அழித்து அதன் மீது பிற மதத்தின் சின்னங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

வடக்கு -கிழக்கு மாகாணங்கள் மத்திய அரசுக்குள் இருக்கும் நிலையில் பௌத்த சின்னங்கள் அங்கு அழிக்கப்படுகின்றன என்றால் தனி இராச்சிய அதிகாரத்தை வழங்கினால் என்ன நேரிடும் என்பதை சிந்திக்கவேண்டும். இதனால் தான் ஒற்றையாட்சியை பாதுகாக்கவேண்டும் என்பதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் அண்மையில் மாவீரர் தினம் வடக்கு -கிழக்கில் அனுஷ்டிக்கப்பட்டது. நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காகவே 29 ஆயிரம் வீரர்கள் உயிர்நீத்தார்கள். பெற்றுக்கொள்ளப்பட்ட சுதந்திரம் பயங்கரவாதிகளை நினைவு கூர்வதற்கு அல்ல என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மாவீரர் தினத்தன்று யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் கீழ்த்தரமான செயற்பாடு என்று இடம்பெற்றுள்ளது.விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடையை சிறுவர்களுக்கு அணிவித்து அவர்களின் கழுத்தில் சயனைட் மாதிரியிலான குப்பிகளை அணிவித்து அவர்களை மாவீரர் தின நிகழ்வுகளில் பங்குப்பற்ற செய்துள்ளார்கள்.இவ்வாறான செயற்பாடுகளையிட்டு வெட்கமடையவேண்டும். சிறு பிள்ளைகளின் மனங்களில் சிங்களவர்கள் தொடர்பில் வைராக்கியம் விதைக்கப்படுகிறது-என்றார்.

(அ)

# மதில் இடிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு !

கொழும்பு, டிசெ. 08

கண்டி கடுகன்னாவை வைத்தியசாலையில் மதில் இடிந்து வீழ்ந்ததில் உடுநுவர பகுதியை சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் பழைய மதிலின் புனர்நிர்மாணப் பணிகளின்போது அது இடிந்து வீழ்ந்ததில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர குறிப்பிட்டார்.

இந்நிலையில், சடலம் கடுகன்னாவை - ஹேனாவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வெல்லம்பிட்டி -வேரகொட வித்தியாலயத்தில், மதில் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வடிவேல் சுரேஸுக்கு ஜீவன் வாழ்த்து



கொழும்பு, டிசெ. 08

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேசுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மலையகத் தமிழ் மக்களை இலங்கைச் சமூகத்துடன் முழுமையாக ஒன்றிணைப்பதை மேற்பார்வையிடுதல் மற்றும் நுவரெலியா, பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பிரச்னைகளை ஆராய்தல் ஆகிய பொறுப்புகளும் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அப்பணிகளையும் அவர் சிறப்பாக முன்னெடுப்பார் என நம்புகின்றேன் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

“ மலையக அரசியல்வாதியாக, தொழிற்சங்கவாதியாக செயற்படும் எமது சமூகத்தை சேர்ந்த ஒருவருக்கு ஜனாதிபதியால் இப்படியான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அவரால் முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு எனது அமைச்சு பக்கத்தில் இருந்து ஏதேனும் ஆதரவு தேவைப்படும் பட்சத்தில், அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.” - எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# பலஸ்தீன சார்பு சால்வையை அணிந்து சபைக்கு வந்த சஜித்!



கொழும்பு, டிசெ. 08

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும், உலக சமாதானத்தை வலியுறுத்தியும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, பாலஸ்தீன சார்பு சால்வை அணிந்து சபை அமர்வில் நேற்று பங்கேற்றார்.


பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், வெளிவிவகார அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் ஆரம்பமானது.

இவ்விவாதத்தில் பலஸ்தீன சால்வை அணிந்தே சஜித் உரையாற்றினார்.

(அ)

# சட்டக்கல்லூரியின் வசதிகளை மேம்படுத்த ஜனாதிபதியின் தலையீட்டினால் புதிய இடம்



கொழும்பு, டிசெ. 08

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கத்துக்கு சொந்தமான இடமொன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், சட்டக் கல்லூரியின் வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசியமான திட்டத்தை விரைவில் தயாரிக்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணி ஒன்றை சட்டக் கல்லூரிக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உறுதியளித்தார்.

அதன் முதற் கட்டமாக 40 பேர்சஸ் காணியை ஒதுக்குமாறும், திட்டத்துக்கு அவசியமான மேலதிக இடப்பரப்பை நீதி அமைச்சுடன் கலந்தாலோசித்த பின்னர் பெற்றுக்கொடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

150 வருடங்கள் பூர்த்தியாகும் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ஒரு துண்டு காணி கூட கிடைக்கவில்லை என்பதால், ஜனாதிபதி இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளமைக்காக சட்டக்கல்லூரி அதிபர் நன்றி தெரிவித்தார்.

(அ)

# சிவப்பு கட்டண பட்டியல் மின்சார சபை விளக்கம்

கொழும்பு, டிசெ. 08

50 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு சிவப்பு கட்டணப் பட்டியலை அனுப்புவது குறித்து ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் இலங்கை மின்சார சபை விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைவாக உரிய கால அவகாசம் வழங்கப்பட்டதன் பின்னரே மின் துண்டிப்பு இடம்பெறும் என மின்சாரசபை தெரிவித்துள்ளது.

50 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு சிவப்பு கட்டணத்தை அனுப்புவது குறித்து ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் இலங்கை மின்சார சபை விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைவாக மின்சாரம் பயன்படுத்திய ஒரு மாதத்தின் பின்னரே மின் கட்டணத்தை செலுத்தவேண்டும் என்றும் பெரும்பாலான நுகர்வோர்கள் உரிய நேரத்தில் மின் கட்டணத்தைச் செலுத்துகின்றார்கள் என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக ஒரு மாதத்திற்கான கட்டணம் செலுவுத்த தவறியதன் பின்னர் சிவப்பு பட்டியல் வழங்கப்படும் என்றும், சிவப்பு பட்டியல் வழங்கப்பட்ட பின்னர் 10 நாட்கள் அவகாசம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ள மின்சார சபை அதன் பின்னரே மின்சாரம் துண்டிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

எனினும், 2023ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 5 இலட்சத்து 44 ஆயிரத்து 488 மின்வெட்டு மற்றும் மின் இணைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சராசரியாக ஒரு வருடத்திற்கு சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் புதிய வாடிக்கையாளர்கள் புதிய மின் இணைப்புகளைப் பெறுவதாகவும், இதனால் 2019 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 44 ஆயிரத்து 488 மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் மின்சார சபை மேலும் குறிப்பிடுகிறது.

இலங்கை மின்சார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட இ-பில் முறையின்படி சிவப்பு கட்டணங்கள் வழங்குவது படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மிக விரைவில் வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் நிலுவைத் தொகை அறிவிக்கப்படும் எனவும் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# ஜனாதிபதி நல்லிணக்கம் குறித்து பேசுகின்றார் அரசாங்கம் வேறு விதத்தில் செயல்படுகின்றது!

## நினைவேந்தல் கைது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, டிசெ. 08

**ஜனாதிபதி ரணில் நல்லிணக்கம் குறித்து பேசுகின்றார். ஆனால் அவரது அரசாங்கம் இனப்பிரிவினைகளை மேலும் ஆழமாக்கும் விதத்திலேயே செயற்படுகின்றது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவேந்திய தமிழர்களுக்கு எதிராக இலங்கை அதிகாரிகள் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தியமை ஈவிரக்கமற்ற துஷ்பிரயோகம் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதி இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இது அரசாங்கத்தின் தொடர்ச்சியான பாரபட்சத்தை எதிர்நோக்கும் சமூகத்தை மேலும் அந்நியப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் நவம்பர் 25- 26 ஆம் திகதிகளில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்த அதிகாரிகள், நினைவேந்தல் நிகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட சோனைகள், ஒலிபெருக்கிகள் போன்றவற்றையும் கைப்பற்றினர்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எதிரான உள்நாட்டு யுத்தம் பிரிவினைவாத ஆயுத அமைப்பின் தோல்வியுடன் 2009 இல் முடிவடைந்தது முதல் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்தவர்கள் யுத்தத்தில் உயிரிழந்தவர்களை தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவேந்துவதை தடுத்து வந்துள்ளனர்.

டிசெம்பர் 2ஆம் திகதி இலங்கையின் வடபகுதி முல்லைத்தீவின் பொலிஸார் 1984 ஆம் ஆண்டு ஒதியமலை தமிழ் கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டமையை நினைவேந்த முயன்றவர்களை தடுத்து நிறுத்தினர்.

உயிரிழந்தவர்களை இன மத சிறுபான்மையினர் நினைவு கூருவதை தடுத்து நிறுத்துவது மதம் நம்பிக்கை வெளிப்பாடு ஒன்றுகூடுதல் ஆகியவற்றிற்கான சுதந்திரத்திற்கான உரிமையை மீறும் செயல்.

இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக தனது சர்வதேச சகாக்கள், வர்த்தக சகாக்கள், ஐக்கிய நாடுகள் ஆகியவர்களுக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தை கைவிடப்போவதாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தப்போவதாக தெரிவித்து வந்துள்ளது.

இந்த சட்டம் நீண்டகாலமாக சிறுபான்மைச் சமூகத்தினர் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை தடுத்துவைத்து சித்திரவதை செய்வதற்கு பயன்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரையும் அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் அந்த சட்டத்தை நீக்கும்வரை அதனை பயன்படுத்துவதை தடை செய்யவேண்டும்-என்றார்.

(அ)



# பீடி இலை கடத்திய இருவர் கைது

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பீடி இலைகளை கற்பிட்டி, ஏத்தாலை பகுதியிலிருந்து நாகவில்லு பகுதிக்கு கடத்த முற்பட்ட இருவரை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

பீடி இலைகளை கடத்திச் செல்வதாக தம்பபண்ணி கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய, புத்தளம் தேத்தாப்பலைப் பகுதியில் வைத்து படையினர் கப் ரக வண்டியை மறித்து சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இதன்போது 41 உரப்பைகளில் சுமார் 1230 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டதோடு, 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதான இருவரும் புத்தளம் தில்லையடிப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுமார் 85 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியானவை என கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த பீடி இலைகள் இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளமை விசாரணையின்போது தெரியவந்ததாக கடற்படையினர் கூறினர்.

(அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒருவர் துப்பாக்கியுடன் சிக்கினார்!

கொழும்பு, டிசெ

பயணப்பொதிகளில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை மறைத்து வைத்திருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மினுவாங்கொடை பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடைய அவர், கட்டுநாயக்க விமான நிலையத்தை அதிகாலை சென்றடைந்தார்.

விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் அங்கு அவர் கொண்டு வந்த பயணப்பொதிகளை ஸ்கான் செய்ததில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(அ)

# சிலாபம் மறை மாவட்டத்துக்கு ஆயராக விமல்சிறி ஆண்டகை

கொழும்பு, டிசெ. 08

சிலாபம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக விமல்சிறி ஜயசூரிய ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸினால் புதிய ஆயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் பிரையன் உடைக்வே ஆண்டகை நேற்று முன் தினம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.



சிலாபம் மறைமாவட்ட ஆயராக கடமையாற்றிய வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, கண்டி மறை மாவட்டத்திற்கான ஆயராக நியமிக்கப்பட்டதை அடுத்து, சிலாபம் மறைமாவட்ட ஆயர் பதவி வெற்றிடமாகியது.

(அ)

# உடலை இரண்டாக வெட்டினாலும் எனது உயிர் ராஜபக்ஷர்களுக்கே!

## ரோஹித அபேகுணவர்தன கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 08

எனக்கு பலர் அரசியல் ரீதியாக சேறு பூசும் வேலைகளை செய்யலாம். என்னை கொலையும் செய்யலாம். உடலை இரண்டாக துண்டித்தாலும் என் உயிர் ராஜபக்ஷர்களுக்கே. மஹிந்த ராஜபக்ஷ போன்று இந்த நாட்டுக்கு இதுவரை எவரும் சேவை செய்யவில்லை. இனியும் செய்யப் போவதுமில்லை என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்புக்கு அமைய முதலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவேண்டும் என்பதுடன் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பிற்போடப்படப்பட்ட குறித்த தேர்தல் எப்போது இடம்பெறும் என்பது தெரியாது. இந்த தேர்தல் இடம் பெறவில்லை எனில் நிச்சயம் அடுத்த வருடம் நவம்பர் மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம் பெற வேண்டும்.

எந்த தேர்தலுக்கும் கட்சி என்ற ரீதியில் நாம் தயாராக இருக்கிறோம். அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை நாம் இதுவரையில் தீர்மானிக்கவில்லை. நிச்சயம் வெற்றி பெறும் வேட்பாளர் ஒருவரை எமது கட்சியிலிருந்து முன்னிறுத்துவோம். மொட்டுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் பொதுத் தேர்தல் மூன்றுக்கு முகங் கொடுத்துள்ளது. இந்த மூன்று தேர்தல்களிலும் நாம் வெற்றி பெற்றுள்ளோம். அடுத்த தேர்தலிலும் வெற்றி பெறுவோம்.

நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான



அரசாங்கமே உள்ளது. நாமே அவருக்கு ஆதரவு வழங்கினோம். அடுத்த தேர்தல் வரும் வரையில் அவருக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். இடைநடுவில் குழப்பத்தை தோற்றுவிக்கமாட்டோம்.

இருப்பினும் ஜனாதிபதி மஹிந்த மற்றும் பஸில் ராஜபக்ஷ உருவாக்கிய கட்சியை உறுதியான கொள்ளைகளுடன் முன்னோக்கிக் கொண்டு செல்வோம். நாட்டு மக்களின் நம்பிக்கையை வென்ற கட்சியாக பொதுஜன பெரமுன காணப்படுகிறது. எதிர்காலத்தின் கட்சியின் எழுச்சிக்கு எமது பொறுப்புகளையும் கடமைகளையும் சரிவர முன்னெடுத்துச் செல்வோம்-என்றார்.

(அ)

# வியாபாரிகளை பதிவதற்கு இடையூறு; மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 08

வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் வியாபாரிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது வியாபாரிகள் சிலர் வெளியாட்களுடன் இணைந்து இடையூறு விளைவித்ததால் இது தொடர்பில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை மரக்கறி சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளை பதிவு செய்து அவர்களை அடையாளப்படுத்தி வியாபார நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்வதற்கும் இலகுவாக்குவதற்கும் பிரதேச சபை வியாபாரிகளின் விவரங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு தடையேற்படுத்தும் வகையில் வியாபாரிகள் சிலரும் அவர்களுடன் இணைந்த வெளியாட்கள் சிலரும் இணைந்து பதிவுகளை மேற்கொண்டுவரும் பிரதேச சபையின் அரச உத்தியோகத்தர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் அவர்களை தாக்குவதற்கும் முயற்சித்துள்ளார்கள்.

குறிப்பாக பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வருமானப் பரிசோதகர்,சந்தை மேற்பார்வையாளர், சுகாதாரத் தொழிலாளி என மூவர் பதிவுகளை மேற்கொண்ட நிலையிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் பிரதேச சபை உத்தியோகத்தர்களால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# புத்த பகவானை பயன்படுத்தி வடக்கில் காணிகள் அபகரிப்பு!

## சபையில் சார்ள்ஸ் எம்.பி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 08

**தமிழர் பகுதிகளில் நிலங்களை பறிக்கின்ற, தமிழர்களின் மத அடையாளங்களை அழிக்கின்ற அடையாளமாக தற்போது புத்த பகவான் பயன்படுத்தப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரையில் எங்களின் நிலங்களை பறிக்கின்ற, எங்களின் மத அடையாளங்களை அழிக்கின்ற ஒரு ஆக்கிரமிப்பின் அடையாளமாக புத்த பகவானை பயன்படுத்துகின்றனர்.

வெளிப்படையாக கூறுவதானால் காணி பிடிப்பதற்கு புத்த பகவானை பயன்படுத்துகின்றனர். இது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

ஒல்லாந்தர் இலங்கை வருகின்ற போது இலங்கை எத்தனை நாடுகளாக இருந்தது? அதே வேளை ஒல்லாந்தர் இலங்கை வந்தபோது இலங் கையில் இருந்த மதம் எது? என்பது தொடர்பில் அமைச்சர் சற்று சிந்தித்து பார்க்க வேண்டும்.

ஒல்லாந்தர் வருகையின் போது பல நாடுகளாக இருந்த இலங்கை பிரித்தானியர்களினாலேயே ஒரு நாடாக்கப்பட்டது.

ஒல்லாந்தர் வருகையின் போது இருந்த மத, மொழி அடையாளங்கள் தற்போது இல்லை.

பௌத்தத்தை, சிங்களவர்களை அடக்கி ஆளவேண்டுமென்ற எண்ணம் தமிழ் ஆயுத அமைப்பிடம் ஒருபோதும் இருந்ததில்லை. அவ்வாறு அவர்கள் செயற்பட்டதும் இல்லை.

இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தொடர்ச்சியாக தமிழர்களின் இன விகிதாசாரத்தை குறைப்பதற்கு இனப்பரம்பல் பல்வேறுபட்ட விடயங்கள் ஊடாக நடக்கின்றது.



உங்களின் அமைச்சின் கீழ் இருக்கின்ற ஒரு சில அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருக்கின்றார்கள்.

நாங்கள் தற்போது கேட்பது என்னவென்றால் இன, மத, மொழி அடையாளங் களுடன் எங்களின் பிரதேசங்களில் வாழ வேண்டும் என்பது தான். எனவே இதனை நீங்கள் புரிந்து செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# பாடசாலை மாணவர்கள் இடையே சீனி உணவுப் பாவனை அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 08

இந்த நாட்டில் முன்பள்ளி மாணவர்கள் மத்தியில் இனிப்பு பானங்கள் மற்றும் சீனி உணவுகளின் பாவனை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களில் முன்பள்ளிச் மாணவர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளதாக அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

முன்பள்ளி சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் பிரிவுத் தலைவி சமூக சுகாதார வைத்திய நிபுணர் இனோகா விக்கிரமசிங்க சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

# அரச நிறுவனங்கள் செயல்படுவதற்கு வழிகாட்டல்களை வெளியிடத் திட்டம்

கொழும்பு, டிசெ. 08

அரச நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்த வழிகாட்டல்களை வெளியிடவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ், சிறைச்சாலை, நன்னடத்தை நிலையம் ஆகியன தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நபரொருவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் செயற்பட வேண்டிய விதம், உளநலம் பாதிக்கப்பட்ட நபரை வழிநடத்தும் விதம் மற்றும் சிகிச்சை அளித்தல் என்பன குறித்தும் வழிகாட்டல்கள் வெளியிடப்படும் என ஆணையாளர் கூறினார்.

டிசம்பர் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வில் இந்த வழிகாட்டல்களை வெளியிட எதிர்பார்ப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

(அ)

# தனியார் துறையினருக்கும் விரைவில் ஊதிய அதிகரிப்பு?

கொழும்பு, டிசெ. 08

அரச துறையினரின் ஊதிய அதிகரிப்புடன் சேர்த்து தனியார் துறையினரின் ஊதியத்தையும் அதிகரிப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் கூறினார்.

இதன்படி, தனியார்துறையில் குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிப்பதற்கான யோசனை அமைச்சரவையின் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் தனியார் துறையின் ஊதியம் அதிகரிப்பு குறித்து அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

# விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு கடூழிய சிறை

கொழும்பு, டிசெ. 08

மூவரின் உயிரிழப்புக்குக் காரணமான தனியார் பேருந்து சாரதிக்கு 12 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு பேருந்து ஒன்றை வேகமாகச் செலுத்தி மிரிஹானை பிரதேசத்தில் மூவர் உயிரிழக்க காரணமானார் என்ற குற்றம் நிரூபிக்கப்பட்டதனையடுத்தே அவருக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது. (ஐ)

# நோயாளர் சேவைகளுக்காக 42 சி.ரி. ஸ்கான் இயந்திரங்கள்

கொழும்பு, டிசெ. 08

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகளுக்காக தற்போது 42 சி.ரி. ஸ்கான் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது, அவற்றில் 40 சி.ரி ஸ்கான் இயந்திரங்கள் இயங்கி வருவதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், ஸ்கான் இயந்திரங்களுக்கு பதிலாக, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 3 இயந்திரங்களை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

சி.ரி.ஸ்கான் இயந்திரங்கள் பல முக்கிய மருத்துவமனைகளில் இயங்காததால் நோயாளிகள் சிரமத்துக்குள்ளானதாக கடந்த சில நாட்களாக தகவல்கள் வெளியாகின.

இதேவேளை,குருநாகல் போதனா வைத்தியசாலை, களுத்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலைகளில் உள்ள சி.ரி. ஸ்கான் இயந்திரங்கள் தற்போது செயலிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சி.ரி. ஸ்கான் தேவைப்படும் நோயாளிகள் வேறு மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதுடன் இரத்தினபுரி மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளில் செயலிழந்துள்ள சி.ரி. ஸ்கான் இயந்திரங்களின் சில பகுதிகளை மீள நிறுவும் பணியை தற்போது ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் 03 நாட்களுக்குள் இந்த இயந்திரங்கள் வழமை போன்று செயற்படும் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், வழங்கப்படவுள்ள நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 3 சி.ரி. ஸ்கான் இயந்திரங்கள் மாத்தறை பொது வைத்தியசாலை, கராப்பிட்டி போதனா வைத்தியசாலை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் இன்னும் ஒரு வாரத்திற்குள் நிறுவப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சி.ரி. இயந்திரத்தின் மூலம் மாதாந்தம் ஆயிரம் முதல் இரண்டாயிரம் நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் 5000 கோடி ரூபாவுக்கு மேல் மோசடி!

## மஹிந்தானந்த குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 08

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழு காணி விநியோகத்தில் 5000 கோடி ரூபாவிற்கு அதிகமான தொகையினை மோசடி செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் வரவு-செலவுத் திட்டம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

ஹந்தானையில் 22 ஏக்கர் காணி ஒரு பேர்ச் 2.38 ரூபாவிற்கு விற்கப்பட்டதாகவும், அதேநேரம் குறித்தக்காணி ஒரு பேர்ச் 10 இலட்சம் ரூபாவிற்கு 'ஹோம் லேன்ட்' நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் காணி சீர்திருத்த ஆணைக்குழு எவ்வாறு செயற்பட்டது என்பதைக் கூறுகின்றேன். 2020 ஆம் ஆண்டு முதல் காணி விநியோகத்தில் ஐந்து பில்லியனுக்கும் அதிகமான தொகையினை மோசடி செய்துள்ளது. ஹந்தானையில் 22 ஏக்கர் காணி ஒரு பேர்ச் 2.38 ரூபாவிற்கு விற்கப்பட்ட நிலையில், அந்த காணியை ஒரு பேர்ச் 10 இலட்சம் ரூபாவிற்கு 'ஹோம் லேன்ட்' நிறுவனத்திற்கு வழங்கியுள்ளனர். இந்த காணி மூலம் மாத்திரம் 2000 மில்லியன் ரூபாவினை மோசடி செய்துள்ளது-என்றார். (அ)

# எட்கா ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளை மார்ச்சுக்குள் நிறைவு செய்ய இணக்கம்

கொழும்பு, டிசெ. 08

எட்கா ஒப்பந்தம் அல்லது உத்தேச இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான தொழில்நுட்ப மட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு இரு தரப்புகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

குறித்த உடன்படிக்கை தொடர்பில் கடந்த மாதம் முதலாம் திகதி வரை இடம்பெற்ற 12ஆவது சுற்று கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் தகவல்களை



முன்வைத்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எட்கா ஒப்பந்தம் தொடர்பான 13ஆவது சுற்று கலந்துரையாடல் எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பொத்துவில் மதுபான சாலைக்கு எதிராக குரல் எழுப்பினார் ரிஷாத்!

கொழும்பு, டிசெ. 08

**"பொத்துவிலில் அமைக்கப்படவுள்ள மதுபானச்சாலைக்கு அனுமதி வழங்காமல் அரசு நிறுத்த வேண்டும்" என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரான ரிஷாத் பதியுதீனின் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொத்துவில் நகரில் மதுபான விற்பனை நிலையம் திறக்கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கோரி அங்கிருக்கும் பொது அமைப்புக்கள் எங்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

அங்கு மதுபானசாலை அமைக்கப்படவுள்ளமையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். குறித்த மதுபான சாலை அமையவுள்ள இடத்திலிருந்து 200 மீட்டருக்குட்பட்ட பிரதேசத்தில் பாடசாலைகள், பௌத்த விகாரை, கோயில், தேவாலயம், ஜும்மா பள்ளிவாசல், வைத்தியசாலை, நீதிமன்றம், பாலர் பாடசாலை என்பன அமைந்துள்ளன.

அங்கு மதுபானச்சாலை அமைந்தால் நாட்டின் இன்றைய பொருளாதார நிலையில் மக்கள் மதுபானத்திற்கும் நிறைய பணத்தை ஒதுக்கி சீரழிவார்கள்-என்றார். (அ)

## ஏறாவூர் நகர சபைக்கு கணக்கீட்டு முகாமைத்துவத்திற்கு சிறப்பு விருது

அம்பாறை, டிசெ. 08




இலங்கை பொதுநிதி கணக்காளர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கணக்கீட்டு முகாமைத்துவத்தை சிறப்பாக அறிக்கையிடுதல் சம்பந்தமான போட்டியில் ஏறாவூர் நகரசபைக்கு சிறப்பு விருது கிடைத் துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் அசோக்க ரஞ்சித் அவர்களிடமிருந்து ஏறாவூர் நகரசபையின் சார்பாக சிறப்பு விருதினை அதன் செயலாளரும் விஷேட ஆணையாளருமான எம்.எச்.எம்.ஹமீம், கணக்காளர் புஸ்ரா நுஸைர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

## மட்டு. டிப்போவில் 4 இடங்களில் குடம்பி

மட்டக்களப்பு, டிசெ. 08

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினருடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில், மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை டிப்போ வளாகத்தில் நான்கு இடங்களில் டெங்கு குடம்பிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் நளின் ஆரியரத்தின தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் மாநகர சபை உட்பட பல நிறுவனங்களின் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், வைத்திய அதிகாரிகள் இணைந்து இப் பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். (அ)

## பாலியல் இலஞ்சம் கோரிய பொலிஸ் அதிகாரி மறியலில்!

கொழும்பு, டிசெ. 08

பாலியல் இலஞ்சம் கோரிய சம்பவம் தொடர்பில் கைதான கல்முனை தலைமையக பொலிஸில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பகுதியை சேர்ந்த 33 வயதுடைய பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே 58 வயதான குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கல்முனை ஆதார வைத்தியசாலையில் பாரிசவாத தின விழிப்புணர்வு நாடகம்

காரைதீவு, டிசெ. 08

உலக பாரிசவாத தினத்தினை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் உலக பாரிசவாத தின நிகழ்வு நடைபெற்றது.

வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் எம்.என்.எம். சுவைப்பின் ஏற்பாட்டில் பாரிசவாதப் பிரிவு உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் உதவியோடு வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக வரவேற்புரையினை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, பாரிசவாதப் பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ஜி.சோளவேந்தன் வழங்கினார்.

தொடர்ந்து டாக்டர் எம்.ஏ. ஏ. சுஜாவினால் பாரிசவாத நோய் தொடர்பான விளக்கவுரை நடைபெற்றது.




தொடர்ந்து வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் சுவைப்பினால் பாரிசவாத நோய் நிலைமை பற்றிய சிறப்புரை இடம்பெற்றது.

தொடர்ந்து பாரிசவாத பிரிவு உத்தியோகத்தர்கள் ஊழியர்களினால் பாரிசவாத நோயில் இருந்து எம்மையும் எமது சமூகத்தினரையும் பாதுகாக்க உருவாக்கப்பட்ட விழிப்புணர்வுடன் கூடிய நாடகமும் அரங்கேற்றப்பட்டது. பலராலும் நாடகம் வியந்து பாராட்டப்பட்டது.

இந்நிகழ்வில் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் பி. பிரேமினி, இதயவியல் நிபுணர் எஸ். சுசுன் துஷியந்த லொகுகெடகொட, தாதிய பரிபாலகர் என். சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி. எல். சுஜேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள், வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர். (அ)

## மட்டக்களப்பில் மாவட்ட இலக்கிய விழா






மட்டக்களப்பு. டிசெ. 08

கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்தும் 2023 ஆம் ஆண்டிற்கான மாவட்ட இலக்கிய விழா மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் தலைமையில் நேற்று முன் தினம் புதன் கிழமை மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் கலந்துகொண்டார்.

நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட எழுத்தாளர் சங்க தலைவரும், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி முருகு தயாநிதி, கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எச்.எம்.முசாமில் உள்ளிட்டோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

மூவினங்களின் பாரம்பரியம், தொன்மை மற்றும் பல் மத கலாசார வெளிப்பாடுகள், விழுமியங்களை வெளிப்படுத்தும் பண்பாட்டு கலை கலாசார, இலக்கிய நிகழ்வுகள் இதன் போது அரங்கேற்றப்பட்டன.

இதன்போது இலக்கிய விழாவை முன்னிட்டு மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள், கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் இதன்போது அதிதிகளினால் பாராட்டி நினைவுச்சின்னங்கள், பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்பூட்டும் நாடகம்!



அம்பாறை, டிசெ. 08

"வன்முறையற்ற சமூகம் மகிழ்ச்சியான உலகு" எனும் கருப்பொருளின் கீழ் வீதி நாடகம் மாணவ மற்றும் சமூக பங்கேற்புடன், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வீதி நாடகம், இறக்காமம் அஷ்ரப் தேசிய பாடசாலை, இறக்காமம் அல் அமீன் மகா வித்தியாலயம், இறக்காமம் அஸ்-ஸபா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நேற்று முன் தினம் புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

நாளை சனிக்கிழமை இறக்காமம் - 02, வரிப்பத்தான் சேனை 02, 03, ஆகிய பிரதேசங்களிலும் இந்த வேலைத்திட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவும், இஸ்லாமிக் ரிலீப் நிறுவனமும் இணைந்து இந்நிகழ்வினை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வளைகுடா நாடுகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி விஜயம்!

## அவருக்கு உற்சாக வரவேற்பு

ரியாத், டிசெ. 08

**ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.**

**ஐக்கிய அரபு அமீரகத்தில், முழு குதிரைப்படை மற்றும் வாகன அணிவகுப்புடன் ரஷ்ய ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.**



அதேநேரத்தில், ரஷ்யக் கொடி வர்ணத்தில் தேசிய வான் வழி அக்ரோபாட்டிக்ஸ் விமானக் குழு, ரஷ்யாவை கௌரவப்படுத்தியது.

இதன்போது, ரஷ்யாவின் ஜனாதிபதி, ஐக்கிய அரபு அமீரகத் தலைவர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானிடம், 'எங்கள் உறவுகள் முன்னோடியில்லாத அளவை எட்டியுள்ளன' என்று கூறினார். கிரெம்ளின் அறிக்கை 'அரபு உலகில் ரஷ்யாவின் முக்கிய பொருளாதார பங்காளி' என்று கூறியது.

ரஷ்ய ஜனாதிபதி பின்னர் சவூதி அரேபியாவுக்குச் சென்று, ஆட்சியாளரான பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானைச் சந்தித்தார். இதன்போது, புடின் பட்டத்து இளவரசரை ரஷ்யாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

அத்துடன், எங்கள் நட்பு உறவுகளின் வளர்ச்சியை எதுவும் தடுக்க முடியாது என்று அவர் கூறினார். தற்போதைய பிராந்திய நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளைப் பரிமாறிக் கொள்வது முக்கியமானது என கூறினார்.

இருதரப்பு ஒத்துழைப்பு மத்திய கிழக்கில் பல பதற்றங்களை அகற்ற உதவியது என்று பட்டத்து இளவரசர் கூறினார்.

புடினுக்கும் வளைகுடா நாட்டின் நடைமுறை ஆட்சியாளருக்கும் இடையிலான சந்திப்பில், ரஷ்யாவின் செச்சென் குடியரசின் தலைவர் ரம்ஜான் கதிரோவ், கலந்துகொண்டார்.

கூட்டத்திற்கு முன்னதாக, இரண்டு தலைவர்கள் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான மோதலில் விரிவாக்கத்தை மேம்படுத்துவதற்கான வழிகளைப் பரிசீலிப்பார்கள் என்றும் சிரியா, யேமன் மற்றும் சூடான் மோதல்கள் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியாவில் விவாதிக்கப்படும் என்றும் கிரெம்ளின் அறிவித்தது.

ரஷ்ய செய்தி நிறுவனமான டாஸ், புடினும் பட்டத்து இளவரசரும் ஓபெக் பிளஸ் ஒத்துழைப்பு குறித்து விவாதித்ததை ரஷ்ய அரசாங்க செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் உறுதிப்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளது.

காசாவில் நடக்கும் போர் குறித்து விவாதிக்க புடின், ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை சந்திக்கவுள்ளதாக கிரெம்ளின் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பெப்ரவரி 2022இல் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்ததில் இருந்து புடின், உக்ரைன், ஈரான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு மட்டுமே சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# சக்திவாய்ந்த பெண்களின் பட்டியலில் நிர்மலா சீதாராமனுக்கு 32ஆவது இடம்



ரோம், டிசெ. 08

இத்தாலியின் பிரதமர் ஜியோர்ஜி மெலோனி மற்றும் இந்தியாவின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் 2023ஆம் ஆண்டின் உலகின் சக்தி வாய்ந்த பெண்களில் இடம்பெற்றுள்ளனர்.

போர்ப்ஸ் பத்திரிக்கையால் உலகின் நான்காவது சக்திவாய்ந்த பெண்மணியாக மெலோனி பட்டியலிடப்பட்ட நிலையில், நிர்மலா சீதாராமன் 32வது இடத்தில் பட்டியலிடப்பட்டுள்ளார்.

போர்ப்ஸ் அதன் 2023ஆம் ஆண்டு பட்டியலை நான்கு முக்கிய அளவீடுகளை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

"பணம், ஊடகம், தாக்கம் மற்றும் செல்வாக்கு" ஆகியவை மூலம் இந்த அளவீடு தீர்மானிக்கப்படுகின்றது.

உலகின் சக்திவாய்ந்த பெண் தலைவர்களின் ஃபோர்ப்ஸ் பட்டியலில் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் முதலிடத்திலும், ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் கிறிஸ்டின் லகார்ட் மற்றும் அமெரிக்க துணைத் தலைவர் கமலா ஹாரிஸ் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

பாப் ஸ்டார் டெய்லர் ஸ்விப்ட் 2023 ஆம் ஆண்டில் உலகின் ஐந்தாவது சக்திவாய்ந்த பெண்மணியாக பட்டியலிடப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டில் பத்தாவது சக்திவாய்ந்த பெண்மணியாக மெலிண்டா கேட்ஸ் பட்டியலிடப்பட்டார்.

ஜியோர்ஜியா மெலோனி நான்காவது சக்திவாய்ந்த பெண் இத்தாலியின் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி ஒக்டோபர் 2022 இல் பதவியேற்றார்.

இந்தியாவின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாட்டை அடையாளப்பூர்வமாக வழிநடத்துகிறார்.

2019 இல் முன்னாள் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் காலமானதை அடுத்து, மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானியின் அமைச்சரவை இலாகாக்கள் குறைக்கப்பட்டது.

இதனையடுத்து, பிரதமர் நரேந்திர மோடியின் அமைச்சரவையில் சீதாராமன் மிக மூத்த பெண்ணாக இடம்பிடித்தார்.

2019 இல் முதல் நிர்மலா சீதாராமன் இந்திய நாடாளுமன்றத்தின் மேல்சபையான ராஜ்யசபா உறுப்பினராகவும் உள்ளார். (அ)

# அமெரிக்காவின் நெவாடா பல்கலைக்கழக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் பலி!



நியூயோர்க், டிசெ. 08

அமெரிக்காவின் நெவாடா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன், ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெவாடா பல்கலைக்கழகத்தின் லாஸ்வெகாஸ் வளாகத்தில் இடம்பெற்ற குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபரும் உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தை தொடர்ந்து பொலிஸார் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என பல்கலைகழக நிர்வாகம் தெரிவித்திருந்தது.

பின்னர் மாணவர் சங்க கட்டிடத்திற்குஅருகில் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றதாக தகவல் வெளியாகியிருந்தது.

இதனையடுத்து மாணவர்களை பாதுகாப்பான இடங்களிற்கு செல்லுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவிப்பை வெளியிட்டிருந்தது.

துப்பாக்கி பிரயோகத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவம், சம்பவம் தொடர்பில் மேலதிக விவாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இ-சிகரெட்டை தடை செய்ய பிரான்ஸ் அரசு நடவடிக்கை!

பாரிஸ், டிசெ. 08

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தப்படும் இ-சிகரெட்டுகளை தடை செய்வதற்கான முன்மொழிவுக்கு பிரான்ஸ் பாராளுமன்றம் ஆதரவளித்துள்ளது.

இ-சிகரெட்டானது இளம் பருவத்தினர் சிகரெட் பாவனைக்கு பழக்கப்படுவதற்கான அடித்தளமாகவும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் கருதப்படுகிறது.

இதன்படி, குறித்த முன்மொழிவுக்கு தேசிய சட்டமன்றம் ஒருமனதாக வாக்களித்துள்ளது.

இதற்கமைய, இ-சிகரெட்டுகளை தடை முன்மொழிவானது பாராளுமன்றத்தில் உள்ள 104 உறுப்பினர்களின் வாக்கையும் பெற்றுள்ளது.

இந்த முன்மொழிவை அமுல்படுத்துவதற்கு பிரான்ஸ் செனட்டின் ஆதரவு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுமதி அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

puffs என அழைக்கப்படும் இ-சிகரெட் இளைஞர்களிடையே பிரபலமாக காணப்படுகிறது.



அதிகளவான நிக்கொட்டின் மற்றும் பல்வேறு சுவைகள், மலிவான விலையில் கிடைப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இ-சிகரெட் பாவனையானது தீவிர போதைபொருள் பாவனைக்கு வழிவகுக்கும் என பிரான்ஸ் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திற்குள் இ-சிகரெட்டுகளை தடை அமுல்படுத்தப்படும் என பிரான்ஸ் அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

இதனிடையே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பிரான்ஸில் அறிமுகப்படுத்தப்பட்ட puffs எனப்படும் இ-சிகரெட்களை தடை செய்வதற்கான நடவடிக்கைகள் ஜெர்மனி மற்றும் அயர்லாந்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரான்ஸில் ஆண்டுதோறும் சம்பவிக்கும் 75,000 உயிரிழப்புகளுக்கு புகையிலை பயன்பாடு முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

இந்த பின்னணியில் நாட்டின் அனைத்து கடற்கரைகள், பூங்காக்கள் மற்றும் காடுகள், பாடசாலைகளுக்கு அருகில் புகைபிடிப்பதை தடை செய்வதாக கடந்த மாதம் பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்திருந்தது.

அத்துடன், பிரான்ஸில் சிகரெட்டுகள் மீதான வரி அதிகரிக்கப்படவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# தெல்லிப்பழை தாக்குதலைப் போன்று யாழ்ப்பாணத்தில் இனிமேல் நடக்காது!

## பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்

யாழ்ப்பாணம், டிசெ. 08

**“அண்மையில் இடம்பெற்ற தெல்லிப்பழைத் தாக்குதல் சம்பவம் போன்று இனி யாழ்.மாவட்டத்தில் எந்தவொரு தாக்குதல்சம்பவமும்நடைபெறநாம்அனுமதிக்கமாட்டோம்” என யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.**



யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


தெல்லிப்பழை தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை 48 மணி நேரத்திற்குள் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் ஏனைய பொலிஸ் பிரிவினர் இணைந்து கைது செய்துள்ளார்கள்.

அவர்கள் பயணித்த வாகனத்தையும் மீட்டுள்ளனர். அதே வேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படுவோர் பொலிஸாரால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றார்கள்.

சில குழுவினரிடையே இருந்து வரும் பகைமையின் காரணமாகவே தற்போதைய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக தெல்லிப்பழை சம்பவம்கூட ஏற்கனவே இரு குழுக்களுக்கிடேயே உள்ள முரண்பாட்டுக்கு பழி தீர்க்கும் விதமாகவே இடம்பெற்றுள்ளது.

அதேபோல் யாழ்.மாவட்டத்தில் கூலிக்கு அமர்த்தி வன்முறை சம்பவங்களில் ஈடுபடுவதை இனியும் அனுமதிக்க மாட்டோம். அவ்வாறு யாராவது ஈடுபட்டால் அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை நாம் முன்னெடுத்துள்ளோம்.

பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது பொலிஸாரின் கடமை. எனவே பொதுமக்களுக்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள். பொதுமக்கள் இந்த விடயங்கள் தொடர்பில் அச்சமடைய தேவையில்லை சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு யாழ்ப்பாணத்தில் பொலிஸார் தொடர்ச்சியாக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்-என்றார். (அ)



# ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்

கொழும்பு, டிசெ. 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிரேஷ்ட ஆலோசகராக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மலையகத் தமிழர்களை இலங்கை சமூகத்துடன் முழுமையாக இணைத்துக்கொள்வது குறித்து அறிக்கையிடும் பொறுப்பு வடிவேல் சுரேஷுக்கு இருக்கும் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை அமைப்பாளர் பதவியில் இருந்து வடிவேல் சுரேஷை கட்சி நீக்கியது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது வடிவேல் சுரேஷ் ஆதரவாக வாக்களித்ததை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. (அ)



# கிளிநொச்சியில் கைதான வன்முறை கும்பல் தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 08

கடந்த திங்கள்கிழமை தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்கள் மற்றும் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் என்பன நேற்று யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் தெல்லிப்பழை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் விசேட அணியினரால் கிளிநொச்சி பகுதியில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட குறித்த வன்முறைக் கும்பல் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டதோடு நேற்று மேலதிக சட்டநடவடிக்கைக்காக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

# 74 பாடசாலைக் கட்டடங்கள் ஆபத்தான நிலையில் உள்ளன!

கொழும்பு, டிசெ. 08

நாட்டில் 74 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் பாதுகாப்பற்ற கட்டடங்கள் இருப்பதை கல்வி அமைச்சர் ஒப்புக்கொண்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



இங்கு கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ-

இந்த பாடசாலைக் கட்டடங்களில் திருத்த வேலைப்பணிகளை மேற்கொள்ள அரசாங்கத்திடம் பணம் இல்லை என்றால், நாட்டை வங்குரோத்தாக்கியவர்களிடம் இருந்து இதற்கான பணத்தை எடுத்து பாடசாலைகளின் புனரமைப்புக்கு பயன்படுத்துங்கள்.

தேஸ்டன் கல்லூரி, தங்காலையில் உள்ள ஓர் பாடசாலை, சேருநுவர சோமாதேவி பாடசாலை, தொம்பே ஆரம்பப் பாடசாலை கூட பாதுகாப்பற்ற கட்டடங்களைக் கொண்டுள்ளது.

தொம்பே ஆரம்பப் பிரிவு பாடசாலையில் பணம் இல்லாததால் குறித்த கட்டிடத்தை புனரமைத்து பயன்பாட்டிற்கு எடுங்கள்.

இது ஊடகங்கள் மூலம் தெரிய வந்ததையடுத்து, வலய கல்வி அதிகாரிகள் சம்பந்தப்பட்ட தொம்பே பாடசாலை அதிபரை அழைத்து வந்து கண்டித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் சேருநுவர சோமாதேவி பாடசாலையில் 300 பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள்.

இந்த பாடசாலை வகுப்பறைகளில் புத்து கட்டப்பட்டு சில வகுப்பறைகளில் பாம்பு கூட இருக்கிறது.

நாட்டை வங்குரோத்தாக்கிய தரப்பினர்கள் யார் என்பதை உயர் நீதிமன்றம் வெளிப்படுத்தியுள்ளது.

எனவே, விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறிவிட்டு, அந்தப் பணத்தைப் பயன்படுத்தி பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவேண்டும்-என்றார். (அ)

# வடக்கு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி; 21 இந்திய மீனவர், 4 படகுகளுடன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 08

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், 4 படகுகளுடன், 21 இந்திய மீனவர்கள் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு கடற்பரப்பில், கடற்படையினர் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.



யாழ்ப்பாணம்-நெடுந்தீவு கடற்பரப்பில், அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், 3 படகுகளுடன், 13 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று முன் தினம் இரவு, காங்கேசன்துறை கடற்றொழில் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தலைமன்னார் கடற்பரப்பில், அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 8 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

# தன் இரட்டை குழந்தைகளை 25,000 ரூபாவுக்கு விற்ற தாய்!

கொழும்பு, டிசெ. 08

பிலியந்தலைப் பகுதியைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் தனது இரட்டை குழந்தைகளை விற்பனை செய்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரட்டை குழந்தைகளை தலா 25,000 ரூபாவுக்கு இருவருக்கு விற்ற நிலையில், குழந்தைகளை வாங்கிய இரண்டு பெண்களும் நேற்று கைது செய்யப்பட்டதாக ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் இரட்டைக் குழந்தைகளின் இளம் தாய் மற்றும் ஒரு குழந்தையை வாங்கிய பெண்ணொருவர் ராகம பிரதேசத்திலும் மற்றைய குழந்தையை விலைக்கு வாங்கிய பெண் களனி பிரதேசத்திலும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம பிரதேசத்தில் வீட்டு வேலை செய்து வந்த குறித்த தாய் கொழும்பு காசல் மகப்பேறு வைத்தியசாலையில் ஒரு வாரத்திற்கு முன்னர் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

## ஜனாதிபதி...

ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான அரசாங்கம் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தது. தொடர்ந்து புலம் பெயர்ந்த இலங்கையருக்கான பணி மனை ஒன்றும் நிறுவப்பட்டது. இந்த பணிமனையின் பணிப்பாளர் நாயகமாக இலங்கையின் மூத்த இராஜதந்திரிகளின் ஒருவரான வீ. கிருஷ்ணமூர்த்தி நியமிக் கப்பட்டுள்ளார். இந்தப் பணிமனை ஊடாகவே உலக தமிழர் பேரவை அரசாங்கத்தை அணுகியுள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)

## அடுத்த...

அடுத்த வருடம் நிச்சயம் தேர்தல் நடத்தப்படும். அது ஜனாதிபதி தேர் தலா அல்லது பொதுத் தேர்தலா என்று கூற முடியாது. ஆனால், அடுத்த ஆண்டு தேர்தல் நிச்சயம் நடக்கும். அதற்கு பொதுஜன பெரமுன திட்டமிட்ட ஏற் பாடுகளை செய்து வருகிறது.

சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமா னால் முதலில் உழைக்கும் மக்களுக்கு சம்பளம் அதிகரிப்பட வேண்டும். பின்னரே, பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கு சம்பளம் அதிகரிக்க வேண்டும். யுத்தத்தின் பின்னர் சம்பள அதிகரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட தாகவும் அவர் கூறினார். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

தென்மராட்சி பகுதியிலேயே தத்திக ளின் தாக்கம் அதிகரித்துள்ளதாக குறிப் பிட்ட விவசாய பணிப்பாளர், தத்திகள் தாக்கத்தை கட்டுப்படுத்த விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார். (ஐ)

## முல்லைத்தீவில்...

நிலையில் போலியான விசார ணையை நடத்தி வனஜீவராசிகள் திணைக்களம், நில அளவை திணைக் களம் இந்த வழக்கை தாக்கல் செய்துள் ளது.

அடிப்படை ஏதுக்கள் அற்ற நிலை யில் - மக்களின் நில உரிமையை பறிக்கும் அரசியல் நோக்கத்துக்காகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டி ருக்கலாம் என்பதை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தோம்.

வழக்கு விசாரணையில், வழக்கு தொடுநர் தரப்பு மேலதிக விசாரணை களை முன்னெடுக்க வேண்டும் எனவும் நீதிவானால் பணிக்கப்பட்டது.

இந்த வழக்கு அடுத்த வருடம் மே 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள் ளது - என்றும் கூறினார். (ஐ-10)

## தன்னை

கூறினார்.

இதனை சுட்டிக்காட்டி உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத், "பையில் பேசிய சாணக்கியன் "நான் ஏதாவது கூறினால் என்னை புலி என்று கூறுவீர்கள்"" என்று குறிப்பிட்டார். அவருக்கும் புலிகளுக்கும் எந்த வித தொடர்பும் கிடையாது. மகிந்த ராஜப க்ஷ சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராக இருந்தபோது அவரிடம் போய் அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக பதவி பெற்றார். ராஜபக்ஷர்களுடன் ஒன்றி ணைந்து செயல்பட்டார்.

அது மட்டுமல்ல, இவர் கண்டியில் உள்ள சிங்கள பாடசாலையில்தான் கல்வி கற்றார். சிங்கள வீடுகளில்தான் உணவருந்தினார். சிங்கள பெண்கள்தான் அவரின் தோழிகள். அவர் ஒரு சிங்களப் பெண்ணைத்தான் திருமணமும் செய்ய வுள்ளார்.

எனவே, தமிழ்த் தேசிய கூட்ட மைப்பிலுள்ள ஒன்பது உறுப்பினர் களுக்கு மட்டுமே புலிகள் பற்றி பேச உரிமையுண்டு. ஏனெனில், அவர்கள் புலிகளுடன் இருந்தவர்கள் - வாழ்ந்தார் கள். ஆனால், சாணக்கியனுக்கு தன்னை புலி என்று கூற எந்த தகுதியும் உரிமை யும் கிடையாது - என்றார்.

# யாழ்ப்பாண கடலட்டை பண்ணைகளின் சாதக, பாதகம் குறித்து ஆராயவில்லை!

கொழும்பு, டிசெ. 08

பொருளாதாரம் என்பதை காட்டி இலாபத்தை நோக்காக கொண்டே கடலட்டை பண்ணைகள் உருவாக்கப் பட்டுள்ளது. இதன் பாதக, சாதகங்கள் தொடர்பில் ஆய்வுகள் செய்யப்பட வில்லை. இவை தொடர்பில் துறைசார்ந் தவர்கள் ஆய்வுகள் மேற்கொள்ள வேண் டும் என யாழ். பல்கலைக்கழக விலங்கி யல் துறை பேராசிரியர்கள் தெரிவித்தார் கள்.

யாழ். ஊடக மையத்தில் யாழ்ப்பா ணம் கியுடெக் கரித்தாஸ் நிறுவனம் மேற்கொண்டுவரும் சுற்றுச் சுழல் தொடர்பாக செயல்பாடுகள் மற்றும் கலந்தாய்வுகள் தொடர்பில் விளக்கம ளிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள் விக்கு பதிலளிக்கும் போதே அவர்கள் இதனை தெரிவித்தார்கள்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் கடலட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டுவருகிறது இது பேசு பொருளாக உள்ளது இது பொருளா தாரம் எனக்கூறி இலாபத்தை மட்டுமே பார்த்து பண்ணைகள் அமைக்கப்பட்டுள் ளது. இவை தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. துறைசார்ந் தவர்களே இதனை ஆய்வு செய்யவேண் டும் அவர்களுக்கே இந்த பொறுப்பு உள்ளது.

இயற்கை சமநிலையை குழப்பினால் ஆபத்து அபிவிருத்தி திட்டம்,பொருளா தார திட்டம் என்றாலும் அதனை ஆய்வு குட்படுத்தி அதன் சாதக பாதகங்களை அறிய வேண்டும்.

இதேவேளை, கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்துடன் இணைந்தது நாம் மேற் கொண்ட சந்திப்புகள், கலந்துரையா டல்கள் ஆய்வுகள் முடிவுகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் சமர்பிக்கவுள்ளோம். இந்த முடிவுகளின் படி சுற்றாடல் பாதுபாப்பு, கரையோர பாதுகாப்புக்கள் தொடர்பில் பொது மக்கள், மாணவர்களுக்கு விழிப்பூட்டல் செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அரச நிறுவனங் களின் பொறுப்புகள் தொடர்பிலும் கவ னம்செலுத்தப்பட வேண்டும்என்பதை சுட்டிக்காட்டவுள்ளோம் - என்றார்கள்.

இந்த சந்திப்பில், யாழ். பல்கலைக் கழக விலங்கியல் துறை பேராயராசிரியர் களான திருமதி இராயேந்திராமணி ஞானேஸ்வரன், மூத்த விரிவுரையாளர் திருமதி துளசிதா வில்லியம் சாந்தகுமார் மற்றும் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத் தின் சார்பில் யோசெப் பாலாமற்றும் யூலியன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை தெரிவித்தனர். (ஐ)

# கைபேசியில் பாடசாலை மாணவர்களுக்கு ஆபாச காணொளிகளை காட்டியவர் கைது!

கொழும்பு, டிசெ. 08

கையடக்கத் தொலைபேசி மூலம் 05 பாடசாலை மாணவர்க ளுக்கு ஆபாச காணொளிகளை காட்டிய நபர் வென் னப்புவ பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையின் அதிபர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் லுனுவில் பகு தியை சேர்ந்த 24 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலையில் நான்காம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்க ளுக்கு, குறித்த நபர் ஆபாச காணொளிகளை காண்பித்ததாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்றபோது வகுப் பறையில் ஆசிரியர் எவரும் இல்லை என அதிபர் தெரிவித்துள்ளார். (அ)

# வாக்குறுதி அளித்தபடி சஜித் பதவி விலகவேண்டும்!

## மகிந்தானந்த எம். பி.

கொழும்பு, டிசெ. 08

மத்திய கலாசார நிதியத்தின் நிதி முறையற்ற விதத்தில் உபயோகிக்கப்பட் டுள்ளமை தொடர்பில் விடயங்கள் உறு திப்படுத்தப்பட்டுள்ளதால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் உறுதியளித்தபடி அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என பொதுஜன பெரமுன உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை ஒழுங்கு பிரச்னை ஒன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மத்திய கலாசார நிதியத்தின் நிதி முறையற்ற விதத்தில் உபயோகிக்கப்பட் டுள்ளதை உறுதிப்படுத்தினால் பதவி விலகுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் சபையில் தெரிவித்திருந்தார்.

கலாசார நிதியத்தின் நிதி முறையற்ற விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விடயங்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. குறித்த நிதி பிரயோகம் சட்டத்துக்கு முரணானது என உறுதிப் படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என மத புத்தசாசன, மத விவகார, கலாசார அமைச்சரும் தெரிவித்துள்ளார்.

நிதி முறைகேடாக பயன்படுத்தியுள் ளமை தொடர்பில் அதற்கான கணக் காய்வு அறிக்கையை நான் சபையில் சமர்ப்பித்துள்ளேன். அதன் மூலம் இந்த மோசடி உறுதியாகியுள்ளது. அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் தமது மனை வியின் சிகை அலங்கார நிலையத்துக்கு பாதுகாப்பு அதிகாரிகளை சேர்த்துக் கொண்டுள்ளமை தொடர்பிலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அவர் பாராளுமன் றத்தில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய பாராளுமன்றத்தின் கௌரவத்தை மதித்து உடனடியாக பதவி விலக வேண் டும் என்றார்.

இதன்போது மகிந்தானந்தவுக்கு பதிலளித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல குறிப் பிடுகையில், கலாசார அமைச்சுக்கான செயல்பாடுகள் அனைத்தும் அமைச் சரவை அனுமதியுடனேயே மேற்கொள் ளப்பட்டுள்ளது என்பதை நான் சபையில் உறுதிப்படுத்தினேன் - என்றார். (ஐ)

## கழுத்து...

அவரது சொந்த ஊரான காத்தான் குடிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முன்னதாக சந்தேகத்தின் அடிப்படை யில் கைது செய்யப்பட்ட மதரஸா பாட சாலை நிர்வாகியான மௌலவி மருத் துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்ட நிலையில், மீண்டும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கல்முனை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரி வித்தனர்.

முன்னதாக, மதரஸாவின் கழிவறை யில் தூக்கில் தொங்கிய நிலையில் 13 வயது சிறுவனான எம். எஸ். முஸ்அப் என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்டார். இவரின் மரணம் குறித்து மதரஸாவின் நிர்வாகி கைது செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மட்டக்களப்பில் திடீர் சுற்றிவளைப்பு; 11 வர்த்தகர்கள் மீது வழக்கு தாக்கல்

மட்டக்களப்பு, டிசெ. 08

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கோட்டை முனை மற்றும் கல்லடி ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக ளில் நேற்று முன் தினம் மாலை திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது.

இதன்போது மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை விற் பனை செய்த 11 வர்த்தகர்கள் மீது வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகா தார அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## செவித்திறன்....

நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

இங்கு, செவித்திறன் குறைபாடுள்ள நபர் வாகனம் ஓட்டும் போது ஓர் ஆலோசகர் இருப்பது அவசியம், மேலும் அவர் காணொலி அழைப்பு களை மேற்கொள்ளும் வசதியை பெற்றிருப்பதும் முக்கியம். செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் ஓட்டும் வாகனங்க ளுக்கு ஸ்ரிக்கர் ஒட்டுவதும் கட்டாய மாக்கப்பட்டுள்ளது.

எனவே, செவித்திறன் குறைபாடுள்ள வர்களுக்கு வாகனம் ஓட்டும்போது சிறப்பு வழிகாட்டுதல்கள் வழங்கப் பட்டு, அந்த வழிகாட்டுதல்களின்படி வாகனம் ஓட்டுவது கட்டாயமாகும் - என்றார். (ஐ)

## இரு...

பரிசீலிக்கும் என்று வெளியுறவு அமைச் சர் அலி சப்ரி நேற்று தெரிவித் தார்.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஐ. எம். எவ். நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் இரண்டாவது தவணையை இலங்கை பெறுவதற்கான அதிக வாய்ப்புகள் இருப்பதாக அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடன் தொடர்பான உடன்படிக் கையை இலங்கை பெற்றுக்கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்க சர்வதேச வெற்றியாகும் என அமைச்சர் தெரி வித்தார். (ஐ)

ஈழநாடு Eelanadu

# புதிதாக அமைக்கப்பட்ட பாலம் உடைந்து வீழ்ந்து இருவர் காயம்

## கிளிநொச்சியில் நேற்று சம்பவம்

கிளிநொச்சி, டிசெ. 08

புதிதாக அமைக்கப்பட்ட பாலம் உடைந்து விழுந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதன்படி, கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்தில் உள்ள வீதி ஒன்றில் அமைக்கப்பட்ட பாலமே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

செபஸ்தியார் வீதி என அழைக்கப்படும் குறித்த வீதி ஊடாக நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் பயணிக்கின்றனர்.

இரணைமடு பொதுச்சந்தை, பாடசாலை மற்றும் தொழில் உள்ளிட்ட அன்றாட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு குறித்த வீதி இன்றியமையாததாக உள்ளது.

இந்நிலையில், குறித்த பாலம் கடந்த 2019ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபையினால் அமைக்கப்பட்டதுடன், அதன் பாதுகாப்பிற்கான பணிகள் கடந்த 2022ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டன.

இந்த பணிக்காக ஏறத்தாழ 11



இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அந்த பாலம் வழியாக தொழிலுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பாலம் உடைந்து விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது இடம்பெற்ற இந்த சம்பவம், பஸ் உள்ளிட்ட வாகனங்கள் பயணிக்கும் போது இடம் பெற்றிருந்தால், பாரிய ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கும் என மக்கள் ஆதங்கம் வெளியிட்டனர்.

உடைந்த இந்த பாலத்தை உடனடியாக கரைச்சி பிரதேச சபையினர் சீர் செய்து, நிரந்தரமான அபிவிருத்தி ஊடாக தமது போக்குவரத்து இலகுபடுத்தலை உடன் சீர்செய்து தரவேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர். (அ)

# வவுனியாவில் வாள்வெட்டு இருவர் காயம்!

வவுனியா, டிசெ. 07

வவுனியா ஓயார்சின்னக்குளம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம் பெற்றது.

நேற்று முன்தினம் இரவு வவுனியா ஓயார்சின்னக்குளம் பகுதிக்கு வாகனம் ஒன்றில் மதுபோதையில் சென்ற குழுவினர் அங்கு நின்ற இருவர் மீது துரத்தித் துரத்தி வாளால் வெட்டியுள்ளனர்.

இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அதற்கமைய வவுனியா குற்றத்தடுப்பு பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# சட்டமா அதிபரை நேற்று கண்டித்த உயர்நீதிமன்றம்!



கொழும்பு, டிசெ. 08

நீதிமன்ற உத்தரவின் படி, ஆட்சேபனைகளை தாக்கல் செய்யாத சட்டமா அதிபருக்கு, உயர் நீதிமன்றம் நேற்று கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இனந்தெரியாத குழுவொன்றினால், 2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில், மக்கள் அச்சுறுத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணையை நடத்துமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு, எஸ்.துரைராஜா, யசந்த கோத்தாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில், 'கிரீஸ் பூதம்' எனப்படும் இனந்தெரியாத குழுவின் அச்சுறுத்தல் தொடர்பில், உரிய விசாரணை நடத்துமாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், நேற்று மனு பரிசீலிக்கப்பட்ட போது, மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், இந்த வழக்குகள் தொடர்பாக இதுவரை எந்த ஆட்சேபனையும் தங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மாலி கருணாநாயக்க, ஆட்சேபனைகள் உரிய முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

எனினும், ஆட்சேபனைகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது உறுதியாவதாக நீதியரசர் எஸ். துரைராஜா தெரிவித்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில், பிரதி சொலிசிட்டர் ஜெனரல், அதற்குரிய காரணத்தை தெளிவுபடுத்த முற்பட்ட நிலையில், நீதிமன்றத்தின் பெறுமதியான நேரத்தை வீணடிக்காமல் மனுதாரர்களிடம் நூறு ரூபாய் செலவில் ஆட்சேபனைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதியரசர் எஸ்.துரைராஜா வலியுறுத்தினார்.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், ஆட்சேபனைகளை தாக்கல் செய்யாமைக்கு உயர் நீதிமன்றம் கடுமையாக விமர்சித்த நிலையில் குறித்த வழக்கின் விசாரணைகளை அடுத்த வருடம் ஜூலை 30ஆம் திகதி வரை பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன் ஒத்திகையில் ஈடுபட்ட சஹ்ரான் குழு

## சபையில் கல்வியமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெ. 08

உயிர்த்த ஞாயிறுதாக்குதலிற்கு முன்னர் சஹ்ரான் குழுவினர் ஒத்திகை தாக்குதலொன்றை மேற்கொண்டனர் இந்த ஒத்திகை குறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கேள்வியொன்றுக்கு பதில் அளிக்கையில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு முன்பாக ஏப்பிரல் 16 ஆம் திகதி சஹ்ரான் குழுவினர் தாழங்குடாவில் ஒத்திகையில் ஈடுபட்டனர். இது குறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேசிய புலனாய்வு சேவையின் முன்னாள் இயக்குநர் நிலாந்த ஜயவர்த்தன இது குறித்து அப்போதைய பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனிவிரட்ண ஆகியோருக்கு தெரிவித்தார்.

அவ்வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பணியாற்றியவருக்கும் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. சஹ்ரான் குழுவினர் தங்கியுள்ள இடம் அவர்களது அமைப்பு குறித்து தகவல் வழங்கப்பட்டது - என்றார். (அ)

# கொடிகாமம் பகுதியில் இளைஞர் மீது தாக்குதல்

## வீட்டையும் சேதப்படுத்திய வன்முறை கும்பல்



யாழ்ப்பாணம், டிசெ. 08

கொடிகாமம் பகுதியில், வீதியில் இளைஞன் மீது தாக்குதல் மேற்கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்று இளைஞனின் வீட்டுக்கும் சென்று தாக்குதல் நடத்தியுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளம்போக்கட்டி வீதியில், நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இளைஞனை வழிமறித்த வன்முறைக் கும்பல், அவர் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளனர் .

இந்நிலையில், இளைஞன் மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு, தாக்குதலாளிகளிடம் இருந்து தப்பி ஓடியுள்ளார்.

அதனையடுத்து இளைஞனின் வீட்டுக்கு சென்ற வன்முறைக் கும்பல் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, வீட்டில் இருந்த உடைமைகளை அடித்து உடைத்துச் சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

மேலும், தாக்குதலில் காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், சம்பவம் தொடர்பில் , கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# யாழில் அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்!

யாழ்ப்பாணம், டிசெ. 08

யாழ்.மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்-

யாழ்.மாவட்டத்தில் சில வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிகளவிலான பொது மக்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

3 நாட்கள் காய்ச்சல் மற்றும் தலைவலி மூட்டு மற்றும் தசைகளில் நோவு, வயிற்று வலி, வாந்திபேதி போன்ற நோய் அறிகுறி காணப்படுமாயின் வைத்திய ஆலோசனை பெற்று குருதி பரிசோதனை செய்து டெங்கு இல்லை என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

டெங்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டால் தகுதியான வைத்தியர்கள் அல்லது தாதியர்கள் உள்ள தொடர் மருத்துவ கண்காணிப்பு வழங்க கூடிய வைத்தியசாலைகளில் அனுமதி பெற்று சிகிச்சை வழங்குவதை உறுதிப்படுத்தவேண்டும்.

தகுதி பெறாத மற்றும் அனுமதிக்கப்படாத தொடர் கண்காணிப்பு இல்லாத வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படாது இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்- என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




## ரி-20 பந்துவீச்சு தரவரிசை; ரவி பிஷ்னோய் முதலிடம்!

*டுபாய், டிசெ. 08*

ஐ. சி. சியின் சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலில் ஆப்கானிஸ்தானின் ரஷித் கானை பின்னுக்குத் தள்ளி முதலிடத்துக்கு முன்னேறினார் இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் ரவி பிஷ்னோய்.

23 வயதான ரவி பிஷ்னோய் சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக முடிவடைந்த 5 போட்டிகள் கொண்ட இதுபது - 20 கிரிக்கெட் தொடரில் 9 விக்கெட்கள் வீழ்த்தி சிறந்த செயல் திறனை வெளிப்படுத்தியிருந்தார். இதனால் ஐ. சி. சி. தரவரிசையில் 699 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறினார். ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் 692 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இதேநேரம், இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்கா, இங்கிலாந்தின் ஆதில் ரஷித் ஆகியோர் தலா 679 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தை பகிர்ந்துள்ளனர்.

இலங்கையின் மற்றொரு சுழல்பந்து வீச்சாளர் தீக்ஷன 677 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தைபிடித்துள்ளார்.(ஐ)




## விசித்திர முறையில் ஆட்டமிழந்த ரகீம்

*மிர்பூர், டிசெ. 08*

பங்களாதேஷ் அணியின் மூத்த துடுப்பாட்ட வீரரான முஸ்பிகுர் ரகீம் 35 ஓட்டங்கள் எடுத்த நிலையில் களத்தடுப்புக்கு இடையூறு செய்தார் என்று விசித்திரமாக ஆட்டமிழந்து வெளியேறினார்.

நியூஸிலாந்து - பங்களாதேஷ் இரண்டவாது டெஸ்ட் போட்டி நடக்கிறது. பங்களாதேஷின் மிர்பூரில் நடக்கும் இந்தப் போட்டியில், 41ஆவது ஓவரை கைல் ஜேமிசன் வீசிய நிலையில் முஸ்பிகுர் ரகீம் தடுப்பாட்டம் ஆடினார். பந்து துடுப்பில் பட்டு ஓவ்ஸ்டெம்புக்கு வெளியே சென்ற நிலையில் முஸ்பிகுர் ரகீம் விலகிச் சென்று பந்தை கையால் தட்டி விட்டார்.

இதையடுத்து நியூஸிலாந்து வீரர்கள் முறையீடு செய்ய 3ஆவது நடுவர் அஹ்சன் ராஸா ஆய்வு செய்து முஸ்பிகுர் ரகீம் ஆட்டமிழந்தார் என்று அறிவித்தார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் களத்தடுப்புக்கு இடையூறு செய்து ஆட்டமிழந்த 9ஆவது வீரர் என்ற மோசமான சாதனையை படைத்தார் முஸ்பிகுர் ரகீம்.

இதற்கு முன்னர் 'ஹாண்டில் தி போல்' என்ற முறையிலேயே நடுவர்கள் ஆட்டமிழப்பு கொடுத்து வந்தனர். ஆனால், கடந்த 2017ஆம் ஆண்டில் விதிமுறைகள் திருத்தப்பட்டன. இதில் 'ஹாண்டில் தி போல்' அவுட் முறை களத்தடுப்புக்கு இடையூறு செய்தல் என்ற விதியின் கீழ் சேர்க்கப்பட்டது. இதனாலேயே தற்போது நடுவர்கள் களத்தடுப்புக்கு இடையூறு செய்தாரென முஸ்பிகுர் ரகீமை வெளியேற்றி உள்ளனர். இந்த வகையில் ஆட்டமிழந்த முதல் பங்களாதேஷ் வீரர் என்ற மோசமான சாதனைக்கும் உரியவராகி உள்ளார் முஸ்பிகுர் ரகீம். (ஐ)

### இரண்டாவது டெஸ்ட் போட்டி:

# பங்களாதேஷ் 172 ஓட்டங்கள் நியூஸிலாந்தும் தடுமாற்றம்!

*மிர்பூர், டிசெ. 08*



நியூஸிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 172 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. தொடர்ந்து விளையாடிய நியூஸலாந்து அணி முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 55 ஓட்டங்கள் எடுத்தது.

மிர்பூரில் நேற்றுமுன்தினம் தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில் நாணயச் சுறழ்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நியூஸிலாந்தின் சுழற்பந்து வீச்சில் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. தொடக்க வீரர்களான சகீர் ஹசன் 8 ஓட்டங்களில் மிட்செல் சாண்ட்னர் பந்திலும், மஹ்முதுல் ஹசன் ஜோய் 14 ஓட்டங்களில் அஜாஸ் பட்டேல் பந்திலும் ஆட்டமிழந்தனர். மொமினுல் ஹக் 5, அணித்தலைவர் நஜ்முல் ஹூசைன் ஷான்டோ 9 ஓட்டங்களில் நடையை கட்டினர்.

47 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் முஸ்பிகுர் ரகீம், ஷதத் ஹூசைனுடன் இணைந்து இணைப்பாட்டத்தைக் கட்டமைக்க முயன்றார். நிதானமாக விளையாடிய முஸ்பிகுர் ரகீம் 83 பந்துகளில், ஒரு சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளுடன் 35 ஓட்டங்கள் எடுத்த நிலையில் களத்தடுப்புக்கு இடையூறு செய்ததாக ஆட்டமிழந்து வெளியேறினார். 5ஆவது விக்கெட்டுக்கு ஷதத் ஹூசைனுடன் இணைந்து முஸ்பிகுர் ரகீம் 57 ஓட்டங்கள் சேர்த்தார்.

ஷதத் ஹூசைன் 102 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிளென் பிலிப்ஸ் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். தொடர்ந்து நூருல் ஹசன் 7, மெஹிதி ஹசன் 20, தைஜூல் இஸ்லாம் 6, ஷோரிபுல் இஸ்லாம் 10 ஓட்டங்களில் நடையை கட்ட பங்களாதேஷ் அணி 66.2 ஓவர்களில் 172 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. நயீம் ஹசன் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நியூஸிலாந்து தரப்பில் மிட்செல் சாண்ட்னர், கிளென் பிலிப்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் அஜாஸ் பட்டேல் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். இதையடுத்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியும் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில் தடுமாறி விக்கெட்களை பறிகொடுத்தது. ரொம் லதாம் 4, ஹென்றி நிக்கோல்ஸ் ஓர் ஓட்டத்துடன் தைஜூல் இஸ்லாம் பந்தில் நடையை கட்டினர். டெவன் கொன்வே 11 ஓட்டங்களில் மெஹிதி ஹசன் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். கேன் வில்லியம்சன் 13, ரொம் பிளண்டல் ஓட்டம் எதுவும் எடுக்காமல் மெஹிதி ஹசன் பந்தில் வெளியேறினர்.

முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் நியூஸிலாந்து அணி 12.4 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 55 ஓட்டங்கள் எடுத்தது. டரில் மிட்செல் 12, கிளென் பிலிப்ஸ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பங்களாதேஷ் அணி சார்பில் மெஹிதி ஹசன் 3 விக்கெட்களையும், தைஜூல் இஸ்லாம் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். கைவசம் 5 விக்கெட்கள் இருக்க 117 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது. (ஐ)

## ஜோன்சன் - வோர்ணர் அமர்ந்து பேச வேண்டும்!

### வில்லியர்ஸ் கருத்து

*டர்பன், டிசெ. 08*

டேவிட் வோர்ணர் மற்றும் மிற்செல் ஜோன்சன் இடையிலான கருத்து வேறுபாட்டை இருவரும் பேசி தீர்வு காண வேண்டும் என டி வில்லியர்ஸ் வலியுறுத்தி உள்ளார்.

வோர்ணரை ஏன் ஒரு நாயகனை போல கொண்டாட வேண்டும் என முன்னாள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மிட்செல் ஜோன்சன் தெரிவித்திருந்தார். அதோடு வோர்ணரை பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான அணியில் சேர்த்தது ஏன் என்றும் விமர்சித்திருந்தார்.

முக்கியமாக கடந்த 2018-ல் பந்தை சேதப்படுத்திய விவகாரம் குறித்தும், வோர்ணரின் தற்போதைய டெஸ்ட் கிரிக்கெட் வடிவம் குறித்தும் அவர் பேசியுள்ளார். பொதுவெளியில் அவர் வைத்த இந்த விமர்சனத்தை அடுத்து வோர்ணருக்கு ஆதரவாக பலரும் குரல் கொடுத்து வருகின்றனர்.

"பொதுவெளியில் இப்படி பேசுவது எனக்கு பிடிக்கவில்லை. தொலைபேசி அழைப்பு எடுத்து அல்லது இருவரும் ஒரு இடத்தில் அமர்ந்து பேசி தீர்க்க வேண்டும். இருவருக்கும் இடையில் மனக்கசப்பு இருந்திருக்கலாம் என கருதுகிறேன். வோர்ணருடன் இணைந்து கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளேன். அவர் களத்தில் மிருகத்தனமாக இயங்குவார். ஆனால், களத்துக்கு வெளியில் மிகவும் மென்மையானவர். அவருடன் விளையாடியவர் என்ற முறையில் இதை சொல்கிறேன். ஐ. பி. எல். கிரிக்கெட்டில் டில்லி டேர்டெவில்ஸ் அணிக்காக நாங்கள் இணைந்து விளையாடி உள்ளோம்" என டிவில்லியர்ஸ் தெரிவித்துள்ளார். (ஐ)




## ஹர்மன்பிரித் கவுர் புதிய சாதனை!



*புதுடில்லி, டிசெ. 08*

இங்கிலாந்து பெண்கள் அணி 3 ரி - 20, ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக இந்தியா சென்றது. முதலில் ரி - 20 தொடரும் அடுத்து டெஸ்ட் போட்டியும் நடைபெறுகிறது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையேயான முதல் இருபது- 20 போட்டி மும்பையில் நடந்தது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது. இதன்படி முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 196 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 20 ஓவர் முடிவில் 156 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் இங்கிலாந்து அணி 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணி தோல்வியடைந்தாலும் இந்திய அணியின் தலைவி ஹர்மன்பிரீத் கவுர் மகளிர் கிரிக்கெட்டில் யாரும் படைக்காத சாதனை படைத்துள்ளார். சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட்டில் அதிக போட்டிகளில் தலைவராக இருந்தவர் என்ற உலக சாதனையை படைத்தார். இந்த போட்டியையும் சேர்த்து அவர் 101 போட்டிகளுக்கு தலைவியாக பணியாற்றியுள்ளார்.

இதற்கு முன்பு அவுஸ்திரேலியாவின் மக் லானிங் 100 போட்டிகளில் தலைவியாக இருந்ததே சாதனையாக இருந்தது. (ஐ)

# அமெரிக்கத் தூதராக 40 ஆண்டுகளாக பணியாற்றியவர் கியூபாவின் இரகசிய உளவாளியா?

40 ஆண்டுகளாக கியூபாவுக்காக உளவு பார்த்ததாகக் கூறி அமெரிக்க தூதரக அதிகாரி கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

கொலம்பிய நாட்டை பூர்வீகமாகக் கொண்ட 73 வயதான விக்டர் மானுவல் ரோச்சா, டொமினிகன் குடியரசு, அர்ஜென்டினா மற்றும் கியூபாவில் உள்ள அமெரிக்க தூதரகங்களில் பதவிகளை வகித்தவர். 1999 மற்றும் 2002 க்கு இடையில் பொலிவியாவுக்கான அமெரிக்க தூதராகவும் இருந்தார்.

மியாமியில் உள்ள நீதிமன்றத்தில் திங்களன்று அரசுத் தரப்பு முன்வைத்த குற்றச்சாட்டின்படி, ரோச்சா தனது உளவு நடவடிக்கையை 1981 இல் தொடங்கியிருக்கிறார்.





"ரோச்சா கியூபா குடியரசை ரகசியமாக ஆதரித்தது மட்டுமல்லாமல் அதன் ரகசிய சேவைகளின் ஏஜென்டாக பணியாற்றியதாக அமெரிக்க அரசுத்தரப்பு தெரிவிக்கிறது. இதன்மூலம் அமெரிக்காவிற்கு எதிரான உளவுத்துறை தகவல்களை சட்டவிரோதமாக சேகரிக்கும் பணியில் ரோச்சா ஈடுபட்டதாக அமெரிக்கா தெரிவிக்கிறது.

2022 மற்றும் 2023 க்கு இடையில் நடைபெற்ற பல கூட்டங்களில் ஒரு இரகசிய எவ்பிஐ முகவரிடம் ரோச்சா உண்மைகளை ஒப்புக்கொண்டதாக அரசுத் தரப்பு வாதிடுகிறது.

'இந்த நடவடிக்கை ஒரு வெளிநாட்டு முகவரால் அமெரிக்க அரசாங்கத்திற்குள் மிக நீண்ட மற்றும் நீண்டகால ஊடுருவல்களில் ஒன்றை அம்பலப்படுத்துகிறது" என்று அமெரிக்க அட்டர்னி ஜெனரல் மெரிக் பி. கார்லேண்ட் எழுத்துப்பூர்வ அறிக்கையில் தெரிவித்தார்.

தனது அறிக்கையில், ரோச்சா அமெரிக்க அரசாங்கத்தில் பதவிகளை வகித்ததாகவும், நாட்டின் வெளியுறவுக் கொள்கையைப் பாதிக்கும் வகையிலான ரகசிய தகவல்களைப் பெறுவதற்கும் அவருக்கு அனுமதி இருந்ததாகவும் மெரிக் சுட்டிக் காட்டினார்.

அவரது இந்த உளவு செயல்பாடு 2012 வரை நீடித்தது. அப்போது அவர் கியூபா தொடர்பான பாதுகாப்பு விஷயங்களைக் கண்காணிக்கும் அமெரிக்க ராணுவத்தின் தெற்கு துறையின் ஆலோசகராகப் பணிபுரிந்தார்.

அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் குறித்து இதுவரை ரோச்சாவி டம் இருந்து எந்த அறிக்கையும் வரவில்லை.

### ரோச்சா மீதான மூன்று குற்றச்சாட்டுகள் என்ன?

ரோச்சா மூன்று குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்: ஒன்று, சதி செய்ததற்காக, மற்றொன்று வெளிநாட்டு அரசாங்கத்தின் ஏஜென்டாக செயல்பட்டதற்காக மற்றும் மூன்றாவது தவறான தகவல்களை கொடுத்து பெறப்பட்ட பாஸ்போர்ட்டை பயன்படுத்தியதற்காக.




கியூபா பொதுப் புலனாய்வு இயக்கு நரகத்தின் பிரதிநிதியாகக் காட்டிக் கொண்ட ஒரு இரகசிய எவ்பிஐ முகவரிடம் கியூபாவுக்கான தனது "பத்தாண்டுகள்" பணியை ரோச்சா ஒப்புக்கொண்ட தாக அரசுத்தரப்பின் ஆவணம் கூறுகிறது.

நேரில் சந்திப்பதற்கு முன், ரோச்சாவுக்கு வாட்ஸ்அப் மெசேஜிங் செயலியில் ஒரு செய்தி வந்தது. அதில், "ஹவானாவில் உள்ள உங்கள் நண்பர்களிடமிருந்து உங்களுக்கு ஒரு செய்தி உள்ளது. மிகவும் முக்கியமான விஷயம்."

இந்த செய்திக்கான தனது பதிலில் "எனக்கு நீங்கள் சொல்வது புரியவில்லை, ஆனால் நீங்கள் எனக்கு தொடர்புகொள்ளுங்கள்" என்று ரோச்சா பதிலளித்ததாக அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மியாமியில் நிகழ்ந்து பதிவு செய்யப் பட்ட நேரில் நடந்த உரையாடல்களில், எவ்பிஐ முகவர், "ஒரு புதிய தகவல் தொடர்புத் திட்டத்தை நிறுவ" தன்னைத் தொடர்பு கொண்டதாக முகவர் சுட்டிக் காட்டியபோது, ரோச்சா அதற்கு சம்மதித்தாக கூறப்படுகிறது.

கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்க அரசாங்கத்திற்குள் எப்படி ஊடுருவ முடிந்தது என்பதையும் ரோச்சா முகவரி டம் கூறியிருந்தார் என அரசு கூறுகிறது.

"எனக்கு அதை எப்படி செய்வது என்று நன்றாகத் தெரியும், கியூபாவின் உள வுத்துறை எனக்கு ஆதரவ ளித்தது... இது ஒரு நீண்ட செயல்முறை மற்றும் இது எளிதானது அல்ல," என்று அவர் எவ்பிஐ முகவரிடம் கூறியதாக கூறப்படுகிறது.

மேலும் அவர் அமெரிக்காவை "எதிரி" என்றும், தன்னையும் கியூபா அரசாங்கத்தையும் குறிக்க 'நாங்கள்" போன்ற சொற்களைப் பயன்படுத்தினார், மேலும் ஃபிடல் காஸ்ட் ரோவை "தளபதி" என்று அழைத்தார் எனவும் கூறப் படுகிறது.

கொலம்பியாவில் பிறந்த ரோச்சா, நியூயார்க்கில் குடியேறிய தொழிலாள வர்க்க குடும்பத்தில் வளர்ந்தார்.

யேல், ஹார்வர்ட் மற்றும் ஜார்ஜ் டவுன் ஆகிய புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் இருந்து பட்டங்களைப் பெற்றார்.

1978-இல் ரோச்சா ஒரு இயற்கையான அமெரிக்கரானார் மற்றும் 1981-இல் தூதரக அதிகாரியாக தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.

பல அமெரிக்க பாஸ்போர்ட்களை வைத்திருந்த ரோச்சா, டொமினிகன் பாஸ்போர்ட்டையும் வைத்திருந்தார். ஹோண்டுராஸ், டொமினிகன் குடியரசு மற்றும் மெக்சிகோ போன்ற இடங்களில் தூதரக பணிகளை மேற்கொண்டிருக்கிறார்.

1994-ஆம் ஆண்டில், கியூபா தொடர்பான பிரச்னைகளுக்கு சிறப்புப் பொறுப்புடன், அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்க நாடுகளுக்கிடையேயான விவகாரங்களுக்கான துணை இயக்குநராக நியமிக்கப்பட்டார். கரீபியன் தீவில் உள்ள முக்கிய அமெரிக்க நலன்கள் பிரிவின் துணை இயக்குநராகவும் இருந்தார்.

பின்னர், 1999ல் பொலிவியாவுக்கான தூதராக நியமிக்கப்பட்டார்.

அங்கு அவர் 2002 அதிபர் தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்பு ஒரு சர்ச்சையில் சிக்கினார்.

ரோச்சா, பொலிவிய மக்களுக்கு ஒரு எச்சரிக்கையை விடுத்தார். இடதுசாரி தலைவரும் முன்னாள் கொக்கா தொழிலாளியுமான ஈவோ மோரல்ஸ் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், மில்லியன் கணக்கான டாலர் உதவியை அமெரிக்கா நிறுத்தும் எனக் கூறினார்.

அவரது இந்தக் கருத்து பரவலாக பரப்பப்பட்டன மற்றும் பொலிவியாவில் அமெரிக்க தலையீடு இருப்பதாகவும் பார்க்கப்பட்டது.

முதல் முறையாக அதிபராகப் பதவியேற்க முயன்ற மொரேல்ஸ், தேர்தல் போட்டியில் தோல்வியடைந்தார், ஆனால் 2005 தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டார், பொலிவியாவில் பூர்வீக வம்சாவளியைச் சேர்ந்த முதல் அதிபரானார்.

மிக சமீபத்தில், ரோச்சா தனியார் துறையில் பல பதவிகளை வகித்தார். அவர் டொமினிகன் குடியரசில் ஒரு தங்க சுரங்கத்தின் தலைவராக இருந்தார் மற்றும் ஒரு செப்பு ஏற்றுமதி நிறுவனத்தின் சட்ட மற்றும் மக்கள் தொடர்புத் துறையில் பணியாற்றினார். ●

# மகா சங்கத்தினரும் அஞ்சும் புனித பசுவான இராணுவம்!

**திஸரணி குணசேகர**

இலங்கையின் பொருளாதார அழிவுக்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்ற விடயம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு மிகவும் உசிதமான ஒரு தருணத்தில் வழங்கப்பட்டிருக்கின்றது. தொடர்ச்சியாக நிலவி வந்த அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடுகள் முடிவுக்கு வந்து, ஓரளவுக்கு மீண்டும் சகஜ நிலை திரும்பிய நிலையில் உருவாக்கப்பட்டிருந்த நம்பிக்கை உணர்வு மீண்டும் மங்கிச் சென்றுள்ளது. பொருளாதாரத்தின் முன்னோக்கிய நகர்வு இப்பொழுது ஸ்தம்பிதமடைந்திருக்கிறது. ஆளுகை துறையின் பல கூறுகள் தொடர்பாக நிலவி வந்த செயல் முடக்கம் மற்றும் உதாசீனம் என்பவற்றுக்கூடாக உருவாக்கப்பட்ட பல்வேறு கோளாறுகளின் கூட்டு இந்நிலைமையை எடுத்து வந்திருக்கிறது. ஜனாதிபதி இப்பொழுது எதனைச் சொல்கிறாரோ அதனைச் செய்வதில்லை. அத்துடன், நாடாளுமன்றம் புத்திசுவாதீன மற்றவர்களைக் கொண்ட ஒரு பாலர் பாடசாலை போல செயற்பட்டு வருகிறது. அங்கு இடம்பெறும் பெரும்பாலான விவாதங்கள் ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் வன்முறையுடன் கூடிய போட்டிகளாக தரம் தாழ்ந்துள்ளன.

நாட்டில் மிக மோசமான பொருள் தட்டுப்பாடுகள் நிலவி வந்த மாதங்களில் இருந்து வந்ததைப் போல இப்பொழுது பொருளாதாரத் துன்பம் அனைவரும் பகிர்ந்து கொள்ளும் ஒரு பிரச்சினையாக காணப்படவில்லை. இன்றைய நிலையில் வருமான உழைப்புப் பிரிவில் மிகத் தாழ்ந்த மட்டத்தில் இருந்து வருபவர்களே அந்தத் துன்பத்தை அனுபவித்து வருகின்றார்கள். 2022ஆம் ஆண்டில் எரிபொருள் கியூ வரிசைகள் மற்றும் மின் வெட்டுக்கள் என்பவற்றின் பாதிப்புக்களை பொதுவாக நாட்டு மக்கள் அனைவரும் எதிர்கொண்டார்கள். அது மக்களுக்கு மத்தியில் ஒருபோதும் இருந்திராத விதத்திலான ஒரு தோழமை உணர்வை உருவாக்கியது. கோல்பேஸ் திடலிலும், நாட்டின் பல்வேறு இடங்களிலும் செல்வந்தர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் வறியவர்களும் தோளோடு தோள் நின்று, ஒன்றாக இணைந்து தமது பொதுவான இழப்புக்களுக்கெதிராக குரல் கொடுத்தார்கள். அவ்விதம் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டும் என்ற அந்த உணர்வு இப்பொழுது மங்கிப் போயிருக்கின்றது. எந்தவித தோழமை உணர்வையும் இப்பொழுது பார்க்க முடியவில்லை. கோபம் மட்டுமே எஞ்சியிருக்கின்றது. இலங்கை மக்களில் சுமார் அரைவாசிப் பகுதியினர் எந்த ஒரு நம்பிக்கையும் இல்லாமல் துன்பம் அனுபவித்து வருவதுடன், அது நாட்டு மக்கள் அனைவருக்குமான ஒரு பாரிய அபசகுனமாக இருந்து வருகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு மதிப்பீட்டாய்வின் முடிவுகள் அரசியல்வாதிகளின் வர்க்கம், தேசிய நிறுவனங்கள் மற்றும் அரசாட்சி என்பன தொடர்பாக பொதுமக்கள் எந்த அளவுக்கு நம்பிக்கை இழந்துள்ளார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. இந்தப் பொதுவான அதிருப்தி உணர்வுக்கு இரண்டு விடயங்கள் விதிவிலக்காக இருந்து வருவதுடன், அதில் ஒன்று நீதித்துறையாகும். பதிலளித்தவர்களில் 40 வீதமானோர் நீதித்துறையின் மீது நம்பிக்கை வைத்திருந்தனர். இந்த வாரம் வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு அவ்விதம் பொதுமக்கள் நீதித்துறையின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை சரியானதுதான் என்பதனைக் காட்டுகின்றது. நாட்டில் பொதுவாக நிலவி வரும் பின்தங்கிய நிலையிலிருந்து நீதித்துறை முற்றாக விடுபடாதிருந்த போதிலும், அது இன்னமும் முடிவடையவில்லை. அது பிரச்சினையின் ஒரு பாகமாக இருந்து வருவதைப் பார்க்கிலும், தீர்வின் ஒரு பாகமாக இருந்து வருகின்றது.



**"வரிகளை அறிமுகம் செய்து வைத்தல் அல்லது அவற்றை உயர்த்துதல் என்பவற்றிலும், இழக்கப்பட்ட அரச வருவாயை மீளப்பெற்றுக் கொள்ளும் விடயத்திலும் தொடர்ச்சியாக நிலவி வந்த செயல் முடக்க நிலை பொருளாதாரத்தின் மீது மிக மோசமான ஒரு தாக்கத்தை எடுத்து வந்ததுடன், அது ஒட்டுமொத்த சமுதாயத்தின் மீதும் ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்திருப்பதை பார்க்க முடிகிறது." - இலங்கை உயர் நீதிமன்றம்.**

இந்தத் தீர்ப்பு தொடர்பாக ராஜபக்ஷர்கள் காட்டியிருக்கும் எதிர்வினை, இலங் கையில் இடம்பெற்ற பாரிய அழிவிலிருந்து அவர்கள் எந்த ஒரு பாடத்தையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதனை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. தாம் எந்த ஒரு தவறையும் செய்திருப்பதாக அவர்கள் நம்பவில்லை. எனவே, தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் என அவர்கள் நினைக்கவில்லை. இழந்திருக்கும் மாயக் கவர்ச்சியை மீளப் பெற்றுக் கொள்வதற்காக மேலோட்டமாக ஒரு சில சிறு சிறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட முடியும். ஓரளவுக்கு அந்த இயல்பிலான பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட முடியும். ஆனால், அவர்களுக்கு மத்தியில் கணிசமான அளவிலான, உண்மையான மாற்றங்கள் எவையும் ஏற்படப்போவதில்லை. தாம் எந்த விதத்திலும் தவறிழைக்கவில்லை என்ற விடயத்தையும், தாம் தவறு செய்யக்கூடியவர்கள் அல்ல என்ற விடயத்தையும் ராஜபக்ஷர்களும், அவர்களுடைய ஆதரவாளர்களும் உறுதியாக நம்புகிறார்கள். அவர்களுடைய உலகக் கண்ணோட்டத்தைப் பொறுத்தவரையில், கோட்டபாய ராஜபக்ஷவின் ஒரேயொரு பிரச்சினை அவர் பதவியை விட்டு விலகி ஓடியமைதான்.

இந்தத் தீர்ப்பின் பிரகாரம், பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்கள், அதனை நிகழ்த்தியிருப்பவர்களிடம் நட்டஈடு கோரி, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்பது ஒரு சில சட்ட வல்லுநர்களின் அபிப்பிராயமாகும். இந்த நெருக்கடியினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரிவினர் நீதிமன்றங்களில் வழக்குகளைத் தாக்கல் செய்யும் ஆற்றல் இல்லாதவர்களாக தமது நாளாந்த வாழ்க்கைப் போராட்டங்களில் மூழ்கிப் போயிருக்கிறார்கள். இவ்விதம் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு, குறிப்பாக, அதன் காரணமாக தமது அன்புக்குரியவர்களை அல்லது வாழ்வாதாரங்களை இழந்திருப்பவர்களுக்கு உதவும் விடயத்தில் அரசியல் எதிர் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் தலையீடுகளை மேற்கொள்ள முடியும். ராஜபக்ஷர்களை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லவும் முடியும். ஆனால், அத்தரப்புக்கள் அவ்வாறு செய்யுமா? உயர் நீதிமன்றம் இத்தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "தன்னிச்சையான, பகுத்தறிவுக்கு ஒவ்வாத மற்றும் வெளிப்படையான விதத்தில் மேற்கொள்ளப்பட்ட நியாயமற்ற முடிவுகள் மற்றும் மிகக் குறைந்த அளவிலான வழிமுறைகள் என்பவற்றின் காரணமாக தொடர்ச்சியாக நிலவி வந்த செயல் முடக்கம் அழிவுகரமான பின்விளைவுகள் தோன்றுவதற்கு பாரிய அளவிலான பங்களிப்பை வழங்கியிருந்தது." அத்தகைய தன்னிச்சையான, பகுத்தறிவுக்கு ஒவ்வாத மற்றும் நியாயமற்ற முடிவுகளை எடுத்த நபர்களுக்கு எதிராக பெருந்தொகையான வழக்குகளைத் தாக்கல் செய்வதன் மூலம் தற்போதைய மற்றும் எதிர்கால கொள்கை உருவாக்குபவர்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் ஒரு செய்தியை அனுப்பி வைக்க முடியும். அதாவது, சமுதாயத்துக்கு பொய் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றுவது இறுதியில் தனிப்பட்ட முறையில் நிதியிழப்புக்களுக்கு வழிகோல முடியும் என்ற விதத்தில் அந்தச் செய்தி அவர்களுக்கு அனுப்பப்பட முடியும்.

### மக்களின் தொடர்ச்சியான அறியாமை

பைபிளின் பிரகாரம், ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோர் அறிவு மரத்திலிருந்து பழத்தை உட்கொள்ளும் வரையில் களங்கமற்ற நிலையில் இருந்தார்கள். இலங்கையைப் பொறுத்தவரையில் வாக்காளர்கள் நிரந்தர அறியாமையில் வாழ்ந்து வருகின்றனர். வாழ்நாள் முழுவதும் ஒன்றும் தெரியாதவர்களாக இருந்து வருகின்றனர். ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரும் அவர்களுக்கு அதீத நம்பிக்கை ஊட்டப்படுகின்றது. தேர்தலை உடனடுத்து நாட்டில் ஒரு பெரும் சுபீட்ச நிலை உருவாகியிருப்பதான உணர்வு தோன்றுகிறது. அதையடுத்து ஏமாற்றம், விரக்தி மற்றும் கோபம் என்பன உருவாகின்றன. அதன் பின்னர் அடுத்த மீட்பருக்கான தேடல் ஆரம்பமாகின்றது. எங்கு தவறு நடந்திருக்கின்றது, ஏன் அவ்விதம் ஒரு தவறு நடந்தது என்பது குறித்த எத்தகைய பகுப்பாய்வுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. எந்த ஒரு அரசியல் கட்சியோ அல்லது எந்த ஒரு தலைவரோ எவ்வளவுதான் பரிபூரண நிலையில் இருந்து வந்தாலும் கூட, அவரால் அனைத்தையும் பெற்றுத் தரவோ அல்லது எல்லோரையும் திருப்திபடுத்தவோ முடியாது என்ற விடயத்தை எவரும் உணர்வதில்லை, அல்லது எந்தவொரு தலைவரோ அல்லது கட்சியோ வாக்காளர்களின் கற்பித உலகத்திலிருந்து எல்லோருக்கும் எல்லாவற்றையும் பெற்றுத்தர முடியாது என்பது குறித்த விளக்கமும் இருந்து வரவில்லை. வாக்காளர்களாகிய நாங்கள் கடந்த முறை எதிர்கொண்ட ஏமாற்றத்தில் தள்ளாடி, அடுத்த தடவை சித்தப்பிரமையில் அருவருப்பூட்டும் விதத்தில் இன்னொருவரின் பின்னால் செல்கிறோம். ஒருபோதும் முடிவடையாத இந்த விளையாட்டில் மீட்பும், குப்புற தள்ளிவிடுவதும் என்பன முட்டாள்தனமான ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாக இருந்து வருகின்றன.

அதனையடுத்து நாட்டில் இடம்பெறும் ஜனரஞ்சகமான உரையாடல்களில் இதுவரையில் இல்லாத எதிர்முரண்கள் முட்டி மோதுகின்றன. சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இலங்கையின் வரலாறு மீட்புக்கான எத்தகைய அடையாளங்களும் இல்லாத விதத்தில் குற்றச் செயல்கள் மற்றும் தவறுகள் என்பவற்றின் சலிப்பூட்டும் ஒரு வரலாறாக இருந்து வந்துள்ளது என அடிக்கடி முன்வைக்கப்பட்டு வரும் கூற்றை நோக்குவோம். இதன் மூலம் அனுமானிக்கப்படும் வெளிப்படையான முடிவு, காலனித்துவ ஆட்சிக் காலம் ஒரு சிறந்த காலப் பிரிவாக இருந்து வந்தது என்பதும், பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற முறையில் நாங்கள் சிறப்பாக வாழ்ந்து வந்தோம் என்பதுமாகும். அது எவ்வாறிருந்தபோதிலும், சுதந்திரத்துக்குப் பின்னர் நம்மை ஆண்ட அனைத்துத் தலைவர்களும் எம்மால் தெரிவு தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் ஆவார்கள். அவ்விதம் நாங்கள் தொடர்ச்சியாக மோசமான நபர்களைத் தெரிவு செய்திருக்கும் விடயம் சிந்திக்கத் தெரிந்த மனிதர்கள் என்ற முறையில் எம்மைப் பற்றி சொல்வது என்ன? எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாங்கள் தவறு விட்டிருப்பது ஏன்? எப்பொழுதும் ஏமாற்றப்பட்டிருப்பது ஏன்? இந்தத் தவறுகளிலிருந்து நாங்கள் ஒருபோதும் பாடங்களைக் கற்றுக் கொள்ளாதிருந்தது ஏன்? அடுத்த தடவை நாங்கள் சரியாகச் செய்வோம் எனத் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் இருந்து வந்திருப்பது ஏன்?

(நாளை தொடரும்)